# வலம்புரி

Valamburii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 08 திங்கட்கிழமை (24.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 217







# இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு தலையிடும்



## அரசியல் வட்டாரங்கள் தகவல்–இரா.சம்பந்தன் வரவேற்பு

(டெல்லி)

**இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிடுவதற்கு தயாராகி விட்டதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

அண்டை நாடான இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்ந்து நீடித்தால் இந்தியாவின் வல்லாதிக்கத்திற்கு அது குந்தகமாக அமையுமென இந்திய இராஜ தந்திரிகள் கருதுவதாகவும் இதனால் இலங்கை இன விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டு அதற்கு முடிபு கட்ட வேண்டுமெனவும் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை இந்தியா அழைத்ததாகவும் ஜனாதிபதி . பிரதமர் எதிர்க் கட்சித்தலைவர் உள்ளிட்ட பலர் அவருடன் பேச்சு நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இலங்கை அரசினதும் எதிர்க்கட் சியினது ஆதரவுடனேயே இலங் கை விவகாரத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை திருநெல்வேலியில் நேற்று நடந்தது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி –இராமலிங்கம் வீதிச் சந்தியில் வைத்து இரண்டு இளைஞர்கள் நேற்று மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவ் இரண்டு இளைஞர்களையும் மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதவர்கள் சுட்டுவிட்டுச் சென்றதாக கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தில் திருநெல்வேலி தாளையடியைச் சேர்ந்த செ. சுதர்சன் (வயது 22) ;நல்லூரைச் சேர்ந்த கனகரட்ணம் துஷ் யந்தன் (வயது 19) என்ற இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசா ரணை நடத்திய யாழ். மேல திக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் உயிரிழந்தவர்களின் சட லங்களை மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (சு–5)

## 83 யூலைக் கலவரத்தை நினைவுபடுத்தி ‘சாவிலும் வாழ்வோம்’ சிட்னியில் நேற்று நடந்தது

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கறுப்பு யூலையை நினைவு கூரும் வகையில் சாவிலும் வாழ்வோம் தொடக்க நிகழ்வு நேற்று லிடகம உகரேனியன் மண்டபத்தில் நடைபெற்றது.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் கொல்லப்பட்ட மக்கள் எரியூட்டப்பட்ட வர்த்தக நிலையங்கள் தமிழர் சொத்துக்கள் அக் கால கட்டத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை வெளிக்கொணர்ந்த ஊடகங்களின் பிரதிகள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மகிந்த அரசு பதவியேற்ற பின்னர் ஈழத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகளை மக்களுக்கு தெரியப்படுத்தும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கர வாதத்தடைச்சட்டம் தமிழீழத்தில் கொண்டுவரப்படும்

### நீதித்துறைப் பொறுப்பாளர் பரா தெரிவிப்பு

தமிழீழத்தில் 'பயங்கர வாதத்தடைச்சட்டம்' கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில், போர்க் கைதிகளை விசாரணை செய்வதற்காக பயங்கர வாதத்தடைச்சட்டம் இந்த ஆண்டின் இறுதிக்குள் கொண்டுவரப்படும் என்றார்.

இதற்கான சட்ட வரைபுகள் வெளிநாடுகளில் உள்ள எமது சட்ட வல்லுநர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தைக் கொண்டுவருதன் ஊடாக வாகனேரியில் கைதுசெய்யப்பட்ட இராணுவச்சிப்பாய் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் உள்ளிட்ட போர்க்கைதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் பரா மேலும் தெரிவித்தார்.

தமிழீழத்தில் பயங்கர வாதத்தடைச்சட்டம் கொண்டுவரப்படுவதன் மூலம் ஆழ ஊடுருவும் படையினருக்கும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் நுழையும் படையினருக்கும் கடும் தண்டனை (10 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் வர்த்தகர் சுட்டுக்கொலை

(மல்லாகம்)

மல்லாகம் சந்தியில் வைத்து வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு (வயது 67) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசா ரணை நடத்திய மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந–5,133)

## லெபனானில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்பு கொள்ள

லெபனான் நாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களின் உறவிர்களோ அல்லது நண்பர்களோ அவர்களைத் தொடர்பு கொள்ள முடியாவிட்டால் அவர்கள் குறித்த தகவல்கள் பெற்றுத்தர லெபனான் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் முன் வந்துள்ளது.

லெபனான் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத் தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் வருமாறு;

0096 14 68808 அல்லது 0096 15 924767 இந்த இலக்கங்களில் தொடர்பு கொண்டால் அவர்கள் அங்குள்ளவர்களை தொடர்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை மோசமாகி வருகிறது

### சென்னையில் ரணில் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கையில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாக முன்னாள் பிரதமரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக் கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்து விட்டு கொழும்பு திரும்பும் போது சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அவர் பேட்டியளித்தார்.

அதில் இலங்கையில் வன்முறைச் சம்பவம் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. அப்பாவி மக்கள் உயிருக்கு பயந்து வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண வேண்டும். இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே (10 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத் தாக்குதலில் இரு கடற்படையினர் காயம்

(வேலணை)

வேலணையில் நேற்று நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு கடற்படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

வேலணை வங்களாவடியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.50 மணியளவில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினரை நோக்கி மோட்டார் சைக்களில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் கைக்குண்டை வீசினர்.

இதில் இரு கடற்படையினர் படுகாயமடைந்துள்ளனர். ஒருவர் பலாலி இராணுவமருத்துவமனைக் குக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டு மக்கள் அவல நிலையில்

# உண்மை நிலையை மூடி மறைக்க இராணுவத்தரப்பு முயலுகிறது

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இடம்பெறும் தமிழ் மக்கள் மீதான இராணுவ வன்முறைகளையும் ,குடா நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளையும் இராணுவத்தரப்பு திட்டமிட்டு மூடி மறைத்து வருகின்றது.

இவ்வாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில், குறிப்பாக கடந்த மாதம் யாழ்.குடாநாட்டிற்கு அழைத்து வரப்பட்ட தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் இராணுவத்தினரின் கவச வாகனத்திற்குள் இருந்தவாறே குடாநாட்டு நிலைமையை அவதானித்துச் சென்றனர்.

வெளிப்படையாக அவர்கள் மக்களுடன் கலந்துரையாட அனுமதிக்கப்படவில்லை. இதேபோல் கடந்த 21 ஆம் திகதி யாழ்.குடா நாட்டிற்கு கடும் இராணுவப்பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்ட இந்திய பத்திரிகையாளர்களும் இராணுவத்தரப்பின் கருத்துக்களை மாத்திரமே அறிந்து சென்றுள்ளனர்.

இது தமிழ் மக்களின் உண்மை நிலையை அறிவதற்கு தடையாக அமைந்துவிட்டது. இதனை ஏன் இந்திய ஊடகவியலாளர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

இது தமிழ் மக்கள் ,இந்திய பத்திரிகையாளர் மீதான நம்பிக்கையை இழந்து விட செய்து விடும். உண்மை நிலையை அறியாமல் தமிழ் மக்களுடன் வெளிப்படையாகச் சந்தித்துக் கதைக்காமல் இந்திய ஊடகவியலாளர்கள் சென்றமை தமிழ் மக்கள் மத்தியில் கவலையையும் விரக்தியையுமே விட்டுச் சென்றுள்ளனர்.

எனவே உண்மை நிலையை சரியாக வெளிப்படுத்த ஊடகவியலாளர்கள் முன்வரவேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வவுனியாவில் இருவர் சுட்டுக்கொலை

வவுனியாவில் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவரும் தமிழர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நேற்றைய தினம் வவுனியாவில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தோணிக்கல் மயானத்தில் இருவரது சடலங்களும் கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் கிடந்தன.

இருவரும் அப்பகுதியில் நடந்த திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர்களாக இருக்கக்கூடும் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட ஊர்காவற் படையைச்சேர்ந்த சிங்களவர் மடுகந்தையைச் சேர்ந்தவர் என்றும் மற்றையவர் வவுனியாவைச் சேர்ந்த இராசேந்திரகுலம் என்றும் தெரிய வந்துள்ளது. (ந-5)

## லெபனானுக்குக் தபால் அனுப்ப வேண்டாம்

### தபால்மா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

லெபனானில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையையடுத்து அங்கு தொழில் புரிகின்ற இலங்கையர்களுக்கு இங்குள்ள உறவினர்கள் கடிதங்களை அனுப்ப வேண்டாம் என்று நாட்டு மக்களுக்கு தபால் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக லெபனானின் தகவல் தொடர்பாடல் செயற்பாடுகள் செயலிழந்துள்ளதுடன் லெபனானுக்கான விமான சேவைகளும் தடைப்பட்டுள்ளன.

எனவே தபால் திணைக்களம் லெபனானுக்கான தகவல் தொடர்புகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக தபால்மா அதிபர் சேர்வின் சேனாதீர தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலிருந்து லெபனானுக்கு அனுப்பப்பட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் திரும்பி வந்துள்ளன. எனவே வேறு மார்க்கமாக கடிதங்கள் லெபனானுக்கு சென்றாலும் அந் நாட்டில் கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடு செயலிழந்துள்ளமையால் கடிதங்கள் உரியவர்களை சென்றடையாது.

லெபனானுடன் தொடர்புடைய ஏனைய நாடுகளும் இந் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றன. லெபனான் தபால் சேவையுடன் நாம் பல்வேறு தடவைகள் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

ஆகவே மறுஅறிவித்தல் வரும் வரை லெபனானில் தொழில்புரிகின்ற இலங்கையர்களுக்கு கடிதங்களை அனுப்ப வேண்டாம் என்று மக்களைக் கோருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-7)

## ஜெயானந்தமூர்த்தி மீதான தாக்குதல்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(திருகோணமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி மீதான் தாக்குதலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டில் இருந்த போது கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9.15 மணியளவில் கனரக ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலில் ஜெயானந்தமூர்த்தியின் வீடு பாரிய சேதம் அடைந்துள்ளது. அப்போது வீட்டிலிருந்த ஜெயானந்தமூர்த்தி, அவரது துணைவியார், குழந்தைகள் மற்றும் உறவினர்கள் உயிர் தப்பியுள்ளனர். ஒரு பாதுகாப்பு அதிகாரிக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மீதான இந்தக் கோழைத்தனமான தாக்குதலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கிறது. இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவத்தினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதுவித சந்தேகமும் இல்லை என்றும் அந்தக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவத்தை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தனும் கண்டித்துள்ளார். (ந-5)

## 270 இலங்கைப் பணியாளர்கள் லெபனானில் இருந்து நாடு திரும்பினர்

(கொழும்பு)

லெபனானில் இருந்து முதற் தொகுதியாக சுமார் 270 இலங்கைப் பணியாளர்கள் நேற்று அதிகாலை எயார் லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். லெபனானில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களினால் பாரிய இன்னல்களிற்கும் அச்சுறுத்தல்களிற்கும் உள்ளாகி இருந்த இவர்கள் தாயகத்தை வந்ததடைந்ததையிட்டு தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

ஐ.ஓ.எம்.என்ற புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் உதவியுடன் சிரியாவின் டமாஸ்கஸ் விமான நிலையத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட இவர்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகள் வரவேற்று தத்தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைத்தனர்.

லெபனானில் இருந்து இலங்கை வந்திறங்கிய ஒவ்வொருவருக்கும் உடனடி உதவிப் பணமாக 5 ஆயிரம் ரூபாவை ஐ.ஓ.எம். வழங்கியதாக அதன் இலங்கைக்கான பேச்சாளர் திருமதி றஞ்சிதா பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (ந-5)

## லெபனானில் இருந்து மக்கள் வெளியேற்றம்







# பிதிர்க்கடனை நிறைவேற்றும் ஆடி அமாவாசை விரதம்

எம் முன்னோர்களாகிய சைவசமய சான்றோர் வருடந்தோறும் வரும் தைமாதம் முதல் ஆனி மாதம் வரை உள்ள காலத்தை உத்தராயணம் எனவும் ஆடி முதல் மார்கழி வரை உள்ள காலத்தை தெட்சணாயணம் எனவும் வகுத்துள்ளனர்.

உத்தராயணமும் பூர்வபக்ஷமும் தேவர்களைப் பூசிக்கச் சிறந்ததாகவும் தெட்சணாயணமும் அபரபக்ஷமும்எம் முதாதையரான பிதிர் வம்சத்தினரை பூசிக்கச் சிறந்ததாகவும் வகுத்துள்ளனர்.

மேலும் பிதாவிற்குரிய நாளாக அமாவாசையையும் மாதாவிற்குரிய நாளாக பூரணையையும் கருத்திற்கொண்டு பிதிர்களுக்கு நன்றிக் கடன்களுக்காகத் தர்ப்பணம் செய்தல், தானதர்மங்கள், வழிபாடுகள் செய்தல் எம்முன்னோர் காட்டிய ஒழுக்கநெறிமுறைகளாகவுள்ளன.

மேலும் சூரியனைத் தந்தைக்கு உரியவனாகவும், சந்திரனைத் தாய்க்குரியவனாகவும் கொண்டு சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டு நேராக பூமிக்கு மேல் வரும் நாளான அமாவாசைத் தினத்தையே பிதாவிற்கு பிதிர்க்கடன் செய்யும் நாளாகவும் பூரண தினமான முழுநிலாப் பௌர்ணமி தினத்தையே தாயாருக்கும் அவர் வழியினர்க்கும் பிதிர்க்கடன் செய்யும் நாளாகவும் வகுத்து எம் அன்புக்குரிய மூதாதையர்க்கு நன்றிக்கடன் செய்து அவர்களை நினைவுகூர வேண்டியதன் சிறப்பை காலம் காலமாக வழிப்படுத்தியுள்ளனர்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதும் ,தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதும் எம்மக்களின் சிறந்த நன்மொழிகளாகும். இம்மொழி வழி தொடர்ந்து பேணப்படுவதற்குப் பிதிர்க்கடன்கள் செய்வதும் இன்றியமையாததொன்றாகும். மாதந்தோறும் வரும் அமாவாசையும் பூரணையும் இந்த விரதத்தில் சிறப்புடையனவாயினும் தெட்சணாயணம் தொடங்கும் ஆடி மாத அமாவாசை பிதிர்களுக்கு மிகவும் உகந்த நாளாகக் கொண்டு விரதம் அனுஷ்டித்தும் நீராடியும் பிதிர்தர்ப்பணம் செய்தும் தானதர்மம் செய்தும் நன்றிக் கடன் தீர்த்தல் விசேடமாக கருதப்படுகின்றது.

மகாவிஷ்ணுவின் உடலிலிருந்து தோன்றியதாகக் கருதப்படும் தர்ப்பையும் கார் எள்ளும் துளசியும் கொண்டு பிதிர் தர்ப்பணம் செய்வது ஆடி அமாவாசை விரத நாளின் பிரதான வழிபாடாகவும்- இதுவும் புனித நீராடும் இடங்களிற் செய்வது தனிச் சிறப்பாகும். ஆதலால்தான் எம் மக்கள் சில குறிப்பிட்ட இடங்களான கீரிமலை, வில்லூன்றி, திருவடி நிலை, வல்லிபுரக் கோவில் போன்ற புனித தீர்த்தக்கரைகளை நாடிச் சென்று தீர்த்தமாடி தர்ப்பணம் செய்து தானதர்மங்கள் செய்து வருகின்றனர் எனலாம்.

நம் முன்னோர்களாகிய பிதிர் வழியுள்ளோர்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்படும் கடமையே பிதிர் தர்ப்பணம் எனவும் அவர்கள் மேல் நாம் காட்டும் சிரத்தையாற் செய்யப்படும் காரியமே சிரார்த்தம் எனவும் பொருள் கூறுவார்கள்.

பிதிர்க்கடன்களை ஒழுங்காகச் செய்வதன் மூலம் எம் முன்னோரின் மன நிறைந்த ஆசிகளால் நாம் ஆயுள், செல்வம், புகழ் என்பன பெற்றுச் சிறப்புடன் நல்வாழ்வு வாழலாம் எனவும், இக்கடமைகளை உதாசீனம் செய்தால் பிதிர்களின் சாபங்களுக்கு ஆளாகி வம்சம் குன்றிப் பெரும் துன்பங்களிற்கு இலக்காக நேரிடும் எனவும் எமது சமய நூல்களும் எடுத்துக்கூறியுள்ளன.

எனவே ஆடி அமாவாசை நன் நாளிலே விரதம் அனுஷ்டித்துப் புனித தலங்களில் நீராடி, தானதர்மங்கள், வழிபாடுகள் செய்து பிதிர்க்கடன்கள் முடித்து தர்ப்பணம் செய்து எம் முன்னோராகிய தேவ பிதிர்களின் நல்லாசிகள் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ இறைவனை வேண்டுதல் செய்வோமாக.

**நீர்வை மணி**

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்
என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை
-குறள்

---

# வடக்கில் வெளிநாட்டு கூலிப்படை கொழும்பு நாளிதழ் தகவல்

வெளிநாட்டுக் கூலிப்படைக் குழு ஒன்று அண்மையில் வடக்கிற்கு வரவழைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவினால் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தி விபரம்,

வடக்கிற்கு அழைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டுக் கூலிப்படையில் ஆப்கானிஸ்தான் உட்பட ஆசிய நாடுகளின் கெரில்லா இயக்கங்களுடன் தொடர்புடையவர்களும் உக்ரெய்ன் நாட்டவர்களும் இருக்கலாம் என்று சர்வதேச புலனாய்வுப் பிரிவினர் தங்களின் அறிக்கையினூடாக சுட்டிக்காட்டியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்குத் தேவையான கனரக ஆயுதப் பயிற்சிகள் மற்றும் அதிநவீன ஆயுத கையாள்கை பற்றிய பயிற்சிகளை வழங்குவதற்காக வெளிநாடுகளிலிருந்து அழைத்துப் வரப்படும் கூலிப்படையினருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பெருமளவு பணத்தை வழங்குவதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஐ.தே.க தலைவராக ருக்மன்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராக ருக்மன் சேனநாயக்கவை நியமிக்கும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க தீவிரம் காட்டுவதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து கடந்த திங்கட்கிழமை கட்சியின் மற்றொரு தலைவரான எஸ்.பி. திஸநாயக்கவுடன் ரணில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் போது உடனிருந்த மலிக் சமரவிக்கிரம ருக்மன் சேனநாயக்கவை நியமிப்பது குறித்து விவாதித்துள்ளார்.

ஆனால் அதனை தாம் நிராகரிப்பதாக எஸ்.பி. திஸநாயக்க கூறிவிட்டார். கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதனூடாக அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு காய்களை நகர்த்தி வரும் எஸ்.பி.திஸநாயக்க, ருக்மன் சேனநாயக்க நியமிக்கப்பட்டால் அவரை எதிர்த்து போட்டியிடவும் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (அ)

# அனுரா அன்பளிப்பு

ஹொரகொலவில் உள்ள பண்டாரநாயக்க குடும்பச் சொத்தை சந்திரிகாவின் மகன் விமுக்தி குமாரதுங்கவுக்கு அன்பளிப்பாக அனுரா பண்டாரநாயக்க ஒப்படைத்துள்ளார்.

ஹொரகொலவில் பண்டாரநாயக்க குடும்பத்துக்கான சொத்து முதல் முறையாக பண்டாரநாயக்க குடும்பத்தைச் சேராத ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

லண்டனிலிருந்து திரும்பும் சந்திரிகா குமாரதுங்க ஹொரகொல இல்லத்தில்தான் இனி தங்கக்கூடும் என்று தெரிகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அனுரா பண்டாரநாயக்க, எனக்கோ எனது சகோதரி சுனித்ராவுக்கோ குழந்தைகள் இல்லை. ஆகையால் சந்திரிகாவின் ஒரே மகனான விமுக்திக்கு அதை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளேன் என்றார். (அ)

**கொழும்பு மாநகரசபைத் தேர்தல்**

# சுயேட்சைக் குழுவின் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ண மேல்நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

கடந்த உள்ளூராட்சித்தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்காக முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்ட சுயேட்சைக்குழு நான்கின் உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு முன்வைத்த மனுவை பரிசீலிப்பதற்கு மேல் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதன் பிரகாரம் அடுத்த மாதம் 2ஆம் திகதி மனுவை பரிசீலிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சுயேட்சைக்குழுவின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட உறுப்பினர்களால் குறிப்பிட்ட மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் முறைகேடுகள் காரணமரக தாம் மாநகர சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படவில்லையென அவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதற்காக மேலதிக விருப்பு வாக்குகள் எண்ணப்படவேண்டுமென்று மேல் நீதி மன்றத்தை கோரியிருந்தனர். (அ-9)

# மீண்டும் மனித உரிமை மீறல்கள் சர்வதேச ஊடகவியலாளர் கவலை

(கொழும்பு)

இரு தசாப்த காலத்திற்கு மேலாக இலங்கையில் இடம்பெற்றுவந்த பாரிய மனித வுரிமை மீறல்கள் போன்றவை மீண்டும் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர் பீற்றராப்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கையில் வன்முறைகள் குறைந்திருந்தன.

எனினும் துரதிஷ்டவசமாக தற்சமயம் வன்செயல்கள், அதன்மூலம் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பீற்றராப்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலை காரணமாக பாதிப்படையும் மக்களின் தொகை அதிகரித்து வருகின்றது. இலங்கையின் யுத்தப் பிரதேசத்தில் சிலர் ஆயுதங்களுடன் வந்து இளைஞர்களை அழைத்துச் செல்வதாகக் கூறியுள்ள அவர், அதில் சிலர் திரும்பி வந்துள்ள போதிலும் தமக்கு என்ன நடந்தது என்பதை தெரிவிக்க மறுத்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார். (அ-9)

# வாழைச்சேனையில் கைக்குண்டுகள் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் இரு கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 6.30 மணியளவில் இந்தக் கைக்குண்டுகள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் இந்தக் குண்டுகளை கண்டுபிடித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரே இந்தக் குண்டுகளை அங்கு வைத்துவிட்டு சென்றிருக்கலாம் என்று தேசிய பாதுகாப்பு மத்திய நிலையம் சந்தேகம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்புப் பிரிவினர் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்துள்ளனர். (அ-9)

# சீட்டிழுப்பு என்பது பொய்யான தகவல் பிரி. உயர் ஸ்தானிகராலயம் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரித்தானியாவில் சீட்டிழுப்பு என்ற பொய்யான தகவல் குறித்து அவதானமாக இருக்குமாறு பிரித்தானியா எச்சரித்துள்ளது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிக்ராலயம் இதுதொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானியாவில் நடைபெற்ற சீட்டிழுப்பில் வெற்றிபெற்றிருப்பதாகவும், எனவே தமது வங்கிக் கணக்குகளின் இலக்கங்களை அனுப்புமாறும் இலங்கையர்கள் பலருக்கு மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்துடன் பலர் தொடர்பு கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் இவ்வாறான பொய்யான தகவல்களை நம்பவேண்டாம் என்று பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் கேட்டுள்ளது.

பிரித்தானியாவில் அமைந்துள்ள எந்தவொரு நிறுவனமும் சொந்த வங்கிக் கணக்குகளின் இலக்கங்களை கோரவில்லை என்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (அ-9)


ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாஸநாத சுவாமி
தேவஸ்தானம்
சிவன்கோவில் நல்லூர்

**மண்டலாபிஷேக பூர்த்தி**

நிகழும் விய வருடம் ஆடி 10 புதன்கிழமை (26.07.2006) காலை 8மணிக்கு 1008 சங்காபிஷேகமும் மாலை 5.00 மணிக்கு விஷேட பூஜையும் திருவூஞ்சல் உற்சவம் என்பன இடம்பெறும்.

(C-411)

## அன்று ஒரு தகவல்

### ஒரு சிறந்த மனிதர்

ஒரு பள்ளிவாசல். நபிகள் நாயகம் அங்கே உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றி நிறைய நபித் தோழர்கள். அந்தச் சமயத்திலே நபிகள் நாயகம் சுற்றியிருந்த தோழர்களைப் பார்த்து ஒரு செய்தி சொன்னார்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் ஒரு சொர்க்கவாசி இங்கே வரப்போகிறார் பாருங்கள்" என்றார். இதைக் கேட்டவுடனே சுற்றியிருந்த நபித்தோழர்களுக்கு ஆர்வம் அதிகமாகிவிட்டது...!

"வரப் போகிற அந்தச் சொர்க்கவாசி எப்படி இருப்பார்... பார்த்துவிட வேண்டும்" என்கிற ஆர்வம்! ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்சநேரத்தில் ஒரு மனிதர் அந்தப் பள்ளிவாசலுக்குள் வந்தார். கை, கால் முகத்தைக் கழுவி சுத்தப்படுத்திக்கொண்டார். அமைதியாகத் தொழுதார். அப்புறம் அவர்பாட்டுக்கு எழுந்து போய்விட்டார்.

நபித் தோழர்கள் யோசித்துப் பார்த்தார்கள். இவரா சொர்க்கவாசி? இவரிடம் வித்தியாசம் எதுவும் தெரியவில்லையே! தொழுகையிலே கூட இவர் அதிகநேரம் ஈடுபட்டதாகத் தெரியவில்லை!.... என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டார்கள்.

மறுநாளும் அதே பள்ளிவாசல். அப்பொழுதும் நபிகள் நாயகம் சொன்னார். "இன்னும் கொஞ்ச நேரத்திலே ஒரு சொர்க்கவாசி இங்கே வரப்போகிறார்" கொஞ்ச நேரத்திலே ஒரு மனிதர் அங்கே வந்தார். அவர் யாரென்றால்... நேற்று வந்த அதே மனிதர்... வந்தார்.... தொழுதார்... போயிட்டார்...

மூன்றாவது நாளும் அதே மாதிரி அறிவிப்பு.... அன்றைக்கு வந்தவரும் அதே மனிதர் தான். நபித் தோழர் அனஸ்பின் மாலிக் இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தார்... அப்புறம் ஒரு முடிவுக்கு வந்தார்.

இந்த மனிதர் எங்கேயிருந்து வருகிறார் என்று பார்க்க வேண்டும். தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்கள் அவர் பின்னாடியே தொடர்ந்து போய் கண்காணிக்கவேண்டும். சொர்க்கத்தை அடையக்கூடிய அளவுக்கு அவர் அப்படி என்னதான் செய்கிறார் என்று பார்க்க வேண்டும்.

அந்தத் தீர்மானத்தோடு அவரைப் பின்தொடர ஆரம்பித்தார். மெல்ல அவர் கிட்ட பேச்சுக் கொடுத்து ஒரு நட்பை ஏற்படுத்திக்கொண்டார். அவருடைய வீட்டிலே மூன்று நாட்கள் தங்கியிருக்க அனுமதியும் வாங்கிக்கொண்டார்.

அதற்கப்புறம் இரவு பகலாக அந்த மனிதரைத் தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்தார். அப்படியும் ஒன்றும் புரியவில்லை. எல்லாரையும் போலத்தான் அவரும் இருந்தார். எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

படுக்கிறார்.... எழுந்திருக்கிறார்.... தொழுகைக்குப் போகிறார்.... திரும்பிவருகிறார்.... வேலைக்குப் போகிறார்... திரும்பிவருகிறார்... தொழுகை... அப்புறம் தூக்கம். இவ்வளவுதான்...

சரி இதற்கு மேலே நம்மாலே ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது என்பதைப் புரிந்துகொண்டு நேராக அவரிடமே கேட்டுவிட்டார்.

"ஐயா... நபிகள் நாயகம் உங்களைச் சொர்க்கவாசி என்று சொன்னார். அவரே அப்படி மூன்று தடவை சொன்னதனால் உங்கள் பின்னாடி வந்தேன்...

உங்களிடம் இருக்கிற சிறப்பு என்னவென்று தெரிந்துகொண்டு அதைப் பின்பற்றவேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஆனால் வித்தியாசமாக எதுவும் உங்களிடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை..." என்று சொன்னார்.

அதற்கு அந்த மனிதர் சொன்னார். "நீங்கள் என்னிடம் என்ன பார்த்தீர்களோ அதைத்தவிர வேறு எதுவும் என்னிடம் கிடையாது.. ஆனால் ஒன்று... எப்பொழுதும் என் உள்ளத்திலே யாரைப் பற்றியும் காழ்ப்பு உணர்ச்சி இருந்ததில்லை.

இறைவன் மற்றவர்களுக்கு வழங்கியிருக்கிற அருட்பேறுகளைக் கண்டு நான் பொறாமைப்பட்டதில்லை! ஒவ்வொருநாளும் நான் படுக்கும் போது தூய்மையான உள்ளத்தோடு தூங்குகிறேன்" என்றார்.

நபித் தோழர் அனஸுக்கு உண்மை புரிந்தது. "இவர் தான் சொர்க்கவாசி" என்று.நபிகள் நாயகம் சொன்னதற்கான விளக்கம் அவருக்குக் கிடைத்துவிட்டது. ரொம்ப நன்றிங்க!... என்று சொல்லி அந்த மனிதரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அவர் புறப்பட்டார்.

இதிலிருந்து நாங்கள் என்ன தெரிந்து கொள்கிறோம்?.... மகிழ்ச்சியாக வாழவிரும்புகிறவன் காழ்ப்பு உணர்வு கொள்ளக்கூடாது... பொறாமைப்படக் கூடாது... மனதிலே எந்தக் கெட்ட எண்ணமும் இருக்கக்கூடாது... இப்படியெல்லாம் இருந்தால் நிம்மதியாகத் தூக்கம் வரும்! எவன் ஒருவனுக்குப் படுத்தவுடன் தூக்கம் வருகிறதோ அவன் சரியாக வாழ்கிறான் என்று அர்த்தம்

ஒரு பேராசிரியர் சொன்னார் "இந்தக் காலத்திலே எது எதற்குப் பொறாமைப்படுவது என்று இல்லை. ஒரு மாடு வைக்கோலைச் சாப்பிட்டாலும் மனிதன் அதைப் பார்த்துப் பொறாமைப்படுகிறான்!" என்றார்.

[illegible]

## சந்திரிகாவின் பாதுகாப்பு விவகாரம் கட்சிக்குள் மஹிந்தவுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை குறைத்தது தொடர்பாக சுதந்திரக் கட்சியில் தற்போதைய அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பு வலுக்கிறது.

அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் மின்துறை அமைச்சர் ஜோன் செனிவிரத்ன ஆகியோர் மஹிந்தவை கடுமையா விமர்சனம் செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டுகால ஆட்சியை அகற்றிவிட்டு சுதந்திரக்கட்சியை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியவர் சந்திரிகா. சந்திரிகாவின் பாதுகாப்பு தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. அமைச்சுப் பொறுப்பிலிருந்து விலகி கறுப்பு அங்கி அணிந்து சந்திரிகாவுக்கு இழைக்கப்பட்ட நீதியை நீதிமன்றில் நான் எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று ஜோன் செனிவிரத்ன கூறியுள்ளார்.

அவரைப் போலவே கருத்துத் தெரிவித்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சந்திரிகாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்குவதற்காக முன்னைய அமைச்சரவை ஒரு மனதாக நிறைவேற்றிய தீர்மான விவரங்களைத் தானும் நீதிமன்றில் தாக்கல் செய்யப் போவதாக எச்சரித்தார்.

இத்தகைய கருத்துக்களை அனுமதிக்க விரும்பாத மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்தை திடீரென ஒத்திவைத்துவிட்டார். கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் பேசிய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளேயும் சந்திரிகாவின் பாதுகாப்பைக் குறைத்தமையைக் கடுமையாக விமர்சனம் செய்ததோடு சந்திரிகாவின் பிறந்த நாளன்று அவரது பதவியைப் பறித்தது குறித்த உண்மையை ஒருவரும் பேசாமல் இருக்கின்றனர் என்றும் சாடினார்.

அரச தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட நிலையில் சுதந்திரக் கட்சியில் சந்திரிகாவின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகத் தோற்றமளித்திருந்த நிலையில் சந்திரிகாவுக்கான புதிய அணி அக் கட்சியில் வலுவானதாக உருவாகி வருவதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## இராணுவத்தை புலிகள் சித்திரவதை செய்யவில்லை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகனேரி தாக்குதலில் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் கருணாரட்ணவை தமிழீழ விடுதலைப் புலிகள் சித்திரவதை செய்யவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பேச்சாளர் மார்சல் இசாட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

லான்ஸ் கோப்ரலை கடந்த வாரம் சந்தித்துப் பேசினேன். அவரது உடல்நலம் குறித்து விசாரித்தேன். அவர் நல்ல உடல்நிலையில் இல்லை என்றாலும் சித்திரவதை செய்யப்படவில்லை.

தாக்குதலின் போது முதுகில் காயமடைந்திருப்பதால் புலிகளின் மருத்துவர் சிகிச்சை அளித்து வருகிறார். அவர் குறித்த தகவல்களை இந்த வாரம் அவரது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தவுள்ளோம்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்க தீர்மானங்களின் படி கைது செய்யப்பட்டுள்ள இராணுவத்தினரை தனியே தான் சந்திக்க வேண்டும். ஆகையால் விடுதலைப் புலிகளிடம் அதற்கான அனுமதியைக் கோரவுள்ளோம் என்றார் மார்சல். (அ)

## வடக்கையும் - கிழக்கையும் பிரிக்க முயன்றால் அன்றே சுதந்திர தமிழீழம் மலரும் - அரியநேந்திரன் எம்.பி

(கொழும்பு)

ஜே.வி.பி , ஹெல உறுமய மட்டுமன்றி ஜனாதிபதி நினைத்தால் கூட வடக்கு- கிழக்கைப் பிரிக்க முடியாது. அவ்வாறு பிரிக்க முற்பட்டால் அன்றைய தினம் சுதந்திர தமிழீழம் மலருமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சமாதானத்தின் நிலையும், வடக்கு- கிழக்கின் தற்போதைய நிலையும் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில்,

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒரு முஸ்லிம் குடும்பம் கூட மீளக்குடியேறவில்லையென் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் பொய்ப் பிரசாரம் செய்கிறார்.

யாழ்ப்பாணத்தில் 1253 முஸ்லிம் குடும்பங்கள், முல்லைத்தீவில் 500குடும்பங்களும் மீளக்குடியேறியுள்ளனர். இது கூடத் தெரியாத நீங்கள் அமைச்சராக இருப்பது கேவலமானது. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எத்தனை ஒப்பந்தங்கள் செய்தார்கள். அத்தனைக்கும் என்ன நடந்தது தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றப் பார்க்கிறீர்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

தமிழர் பகுதிகளுக்கு தமக்குத் தேவையான பொருட்களைக் கொண்டுசெல்வதற்குக் கூட இராணுவம் தடைவிதிக்கின்றது.

ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் யுத்தக் கூச்சலிடுகின்றன. ஆனால் ஜனாதிபதி சர்வகட்சி மாநாடுகள் தொலைக்காட்சிதொடராக தொடர்கின்றன. இந்தப் பாராளுமன்றத்தில் மஞ்சள் ஆடை போர்த்திய யுத்த ஆசாமிகள் இருக்கின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

## லெபனானிலுள்ள இலங்கையர் நலன் பேண நடவடிக்கை

(கொழும்பு)

லெபனானின் யுத்தப் பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு இலங்கைப் பணியாளர்களை கொண்டு செல்லும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கையர்களை வெளியேற்றும் விடயம் குறித்த விசேட கலந்துரையாடலொன்று இன்று நடத்தப்படவுள்ளது.நேற்று 268 இலங்கைத் தொழிலாளர்கள் இலங்கை வந்துள்ளதாக பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். விமான நிலையத்திலிருந்து வீடு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வழங்கியுள்ளது.

மத்திய கிழக்கு பிரச்சினை காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் ஏற்கனவே சேமநல வசதிகளை செய்து கொடுத்துள்ளது. (அ-9)

## குறைந்தபட்ச செயல் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தில் இணைகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

குறைந்தபட்ச பொதுச் செயல் திட்டத்தில் மஹிந்தவின் அரசாங்கத்தில் இணைய ஜே.வி.பி இணக்கம் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மஹிந்தவின் அலரிமாளிகையில் யூலை 14,19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் நடைபெற்ற மூன்று சுற்றுப்பேச்சுக்களில் இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான ஒருங்கிணைந்த தீர்வு, சர்வதேச சமூகம் தொடர்பான நிலைப்பாடு, பொருளாதார விடயங்கள் ஆகியவை குறைந்தபட்ச பொதுச் செயல் திட்டத்தில் முக்கிய அம்சங்களாக இடம்பெறக்கூடும்.

மஹிந்தவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜெயந்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமா ஆகியோரும் ஜே.வி.பியின் சார்பில் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச, அனுரா திஸநாயக்க ஆகியோரும் இப் பேச்சுக்களை நடத்தினர்.

கொள்கைகளை நிறைவேற்றி அரசாங்கம் நீண்ட காலம் நீடிக்க வேண்டுமானால் அரசாங்கத்தில் ஜே.வி.பி. இணைந்தாக வேண்டும் என்று மஹிந்த வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தில் இணைவதற்கு முன்னதாக தெளிவான செயல்திட்டம் உருவாக்கப்படவேண்டும் என்று சோமவன்ச அமரசிங்க மஹிந்தவிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து குறைந்தபட்ச பொதுச் செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. அத்தகைய திட்டம் உருவாக்கப்பட்டதன் பின்னர் அதை மக்களிடம் பகிரங்கப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சுப் பொறுப்புக்கள் குறித்து இதுவரை விவாதிக்கப்படவில்லை. எனினும் 4 அமைச்சுப் பொறுப்புக்களை வழங்க மஹிந்த ராஜபக்ஷ முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

அடுத்த சுற்றுப்பேச்சுக்கள் குறைந்த பட்ச பொதுச் செயல் திட்டம் குறித்ததாகவும் அப் பேச்சுக்கள் அரச தலைவர் மாளிகையில் நடைபெறும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# மற்ரஸிக்கு தடைவிதித்தது உதைபந்தாட்ட விதிகளின்படியே

## பிபா அறிவிப்பு

(லண்டன்)

பிரான்ஸ் அணியின் தலைவர் ஜினெடின் ஜிடேன் மோதல் விவகாரத்தில் இத்தாலி வீரர் மார்கோ மற்ரஸிக்கு தடை விதித்தது விதிமுறைகளின்படி சரியே என விளக்கம் அளித்துள்ளது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் (பிபா).

உலகக்கோப்பை உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் மற்ரஸியை மார்பில் முட்டித் தள்ளியதற்காக ஜிடேனுக்கு 3 ஆட்டங்களிலும் மற்ரஸிக்கு 2 ஆட்டங்களிலும் விளையாடத் தடை விதித்தது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு. தவிர அவர்களுக்கு முறையே ரூ.6 இலட்சம், ரூ.4 இலட்சம் அபராதமும் விதித்தது.

இந்நிலையில் மற்ரஸிக்கு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு இத்தாலியில் கடும் சர்ச்சை எழுந்துள்ளது. பத்திரிகைகளும் மற்ரஸிக்கு ஆதரவாகக் களத்தில் குதித்துள்ளன.

மற்ரஸிக்கு அளிக்கப்பட்ட தண்டனையை மானக்கேடான தீர்ப்பு என அங்கிருந்து வெளிவரும் முன்னிலை விளையாட்டுக்கான பத்திரிகையான லா ஸ்டாம்பா தலைப்புச் செய்தியில் தெரிவித்துள்ளது.

ஜிடேன் - மற்ரஸி 3-2; கோபத்தில் இத்தாலி என மற்றொரு முன்னிலை பத்திரிகையான கெசட்டாடெல்லா தெரிவித்துள்ளது.

ஆனால் பிபா, மற்ரஸிக்கு விதிக்கப்பட்ட தண்டனையிலிருந்து விலக்கவில்லை. அதற்கு உதைபந்தாட்ட விதிமுறைகளைக் காரணம் காட்டி விளக்கம் அளித்துள்ளது.

அங்க அசைவுகளாலோ, வார்த்தைகளாலோ ஒருவர் மற்றொருவருக்கு ஆத்திர மூட்டும் வகையில் நடந்துகொண்டால் சர்வதேச போட்டிகளில் பணியாற்றத் தடை விதிக்க வழிவகை உள்ளது. அது அதிகாரியாக இருந்தால் தண்டனை சற்று அதிகம். ஜிடேன் ஆத்திரப்படும்படி நடந்துகொண்டதற்காக வீரர் என்ற முறையில் மற்ரஸிக்கு 2 ஆட்டங்களில் மட்டும் விளையாடத் தடை விதிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளது பிபா.

தாயையும் சகோதரியையும் இழிவாக பேசியதாலேயே நான் அவ்வாறு நடந்து கொண்டேன் என தொலைக்காட்சிக்கு முதன் முதலாக பேட்டி அளித்தபோது ஜிடேன் விளக்கம் அளித்திருந்தார்.

# உலகக் கோப்பை கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு ஆவலாகவுள்ளேன்

## அனில் கும்ளே

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் அனில் கும்ளே. டெஸ்ட் கிரிக்கெட்டில் 533 விக்கெட்டுக்களையும் ஒருநாள் போட்டிகளில் 329 விக்கெட்டுக்களையும் சாய்த்துள்ள கும்ளே சமீபகாலமாக ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் சேர்க்கப்படாமல் இருந்து வருகிறார்.


இந்நிலையில் உலக கோப்பை கிரிக்கெட்டில் ஆட ஆவலுடன் இருப்பதாக கும்ளே கூறினார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது,

பெரிய போட்டிகளில் ஆட தகுதியுடன் உள்ளேன். ஆனால் உலக கோப்பை போட்டியில் ஆடுவேனா? மாட்டேனா? என்று கூறமுடியாது. எனினும் உலக கோப்பையில் ஆட ஆவலுடன் உள்ளேன். 2003இல் நடந்த உலக கோப்பை போட்டிக்குப் பின்னர் ஒருநாள் போட்டிக்கான அணியில் சேர்க்கப்படாமல் இருந்து வருகிறேன். இது அதிர்ச்சி அடையச் செய்துள்ளது மட்டுமல்லாமல் எனது விளையாட்டு திறனையும் பாதித்துள்ளது. ஆனால் இதைப் பற்றி கவலைப்படக்கூடாது என்று நான் முடிவு செய்துள்ளேன்.

எனக்கு இன்னும் ஒருநாள் போட்டிகளில் ஆட வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

காயத்தில் இருந்து மீண்டு சச்சின் டெண்டுல்கர் அணிக்கு திரும்புவது மிகவும் நல்லதாகும். அவர் முன்பை விட சிறப்பாக ஆடுவார் என்ற நம்பிக்கை உள்ளது. டெண்டுல்கரின் துடுப்பாட்டம் மற்றும் ஒட்டுமொத்த திறமையைப் பார்த்து இளம் வீரர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். அதுமட்டுமல்லாமல் எதிரணியே டெண்டுல்கரைப் பார்த்துப் பயப்படும். இதுபோன்ற காரணங்களுக்காகவே அவர் ஆடவேண்டும். இது அணிக்கும் உதவிகரமாக இருக்கும். இவ்வாறு கும்ளே கூறினார்.

# இந்தியாவின் சானியா காலிறுதியில் சுவிற்சர்லாந்தின் ஸ்னைடரிடம் தோல்வி



(ஓஹியோ)

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் புயல் சானியாவின் வெற்றிநடை முடிவுக்கு வந்து விட்டது. அவர் காலிறுதியில் சுவிற்சர்லாந்தின் பேட்டி ஸ்னைடரிடம் தோல்வியடைந்தார்.

ஒஹியோவில் உலகின் முன்னணி வீராங்கனைகள் பங்குபெறும் டபிள்யூ.டி.ஏ. அந்தஸ்து பெற்ற டென்னிஸ் தொடர் நடக்கிறது.

கடந்த வியாழக்கிழமை நடந்த காலிறுதி போட்டியில் இந்தியாவின் இளம் டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான பேட்டி ஸ்னைடரை எதிர்த்து விளையாடினார்.

இப்போட்டியில் சானியா ஸ்னைடருக்கு கடும் சவாலாக இருந்தார். முதல்செட்டை 6-7 என இழந்த சானியா இரண்டாம் செட்டிலும் ஸ்னைடருக்கு பதிலடி தர தவறினார். ஸ்னைடர் இரண்டாவது செட்டை 5-7 என கைப்பற்றினார்.

இறுதியில் சானியா 6-7, 5-7 என்ற நேர் செட்களில் போராடி தோல்வியடைந்தார்.

மற்றொரு காலிறுதி போட்டியல் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 6-2 6-2 என்ற செட்களில் சக நாட்டு வீராங்கனையான அமி பிரேசியரை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

# பாகிஸ்தான் தொடரிலிருந்து பிளின்டொப் விலகல்



(லண்டன்)

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களிலிருந்து இங்கிலாந்து வீரர் அன்ரூ பிளின்டொப் விலகியுள்ளார். இடது கணுக்காலில் சத்திரசிகிச்சை செய்யவுள்ளதால் இத்தொடரை இழந்தார் பிளின்டொப்.

இங்கிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக வலம் வருபவர் அன்ரூ பிளின்டொப். இரண்டு மாதங்களாக கணுக்கால் காயத்தால் அவதிப்பட்டு வரும் பிளின்டொப், இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தார். தற்போது பாகிஸ்தான் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

முதல் டெஸ்டில் பிளின்டொப் விளையாடவில்லை. வோன் இல்லாத நிலையில் இங்கிலாந்து அணியின் தலைவராக செயல்பட்டு வந்த பிளின்டொப் தற்போது காயத்திலிருந்து மீண்டு வருகிறார்.

உள்ளூர் அணிகளுள் ஒன்றான கென்ட் அணிக்காக தற்போது விளையாடி வரும் பிளின்டொப் லாங்ஷையர் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் 2 விக்கெட்டுக்கள் கைப்பற்றி அசத்தினார். நேற்று முன்தினம் நான்காவது நாள் ஆட்டத்தில் பந்துவீசிய அவர் கணுக்காலில் லேசான வலி ஏற்பட்டதால் போட்டியிலிருந்து வெளியேறினார். இடது கணுக்காலில் அடுத்தவாரம் சத்திரசிகிச்சை செய்ய மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களிலிருந்து பிளின்டொப் நீக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. சத்திரசிகிச்சைக்குப் பிறகு அதிக ஓய்வு தேவைப்படுவதால் இந்தியாவில் நடக்கவிருக்கும் ஐ.ஸி.ஸி சம்பியன்ஸ் சுற்று தொடரில் பிளின்டொப் பங்கேற்பது கேள்விக்குறியாகவுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

அமிர்தன்




# மினி உலகக் கிண்ணத்திற்கான அணிகளை அறிவிக்க ஐ.ஸி.ஸி கெடு

மினி உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அணி வீரர்களின் பட்டியலை செப்டம்பர் 7ஆம் திகதிக்குள் அறிவிக்குமாறு ஐ.ஸி.ஸி உத்தரவிட்டுள்ளது.

இரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் மினி உலக கோப்பை தொடர் இந்த ஆண்டு இந்தியாவில் அக்டோபர் 7ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை மொகாலியில் நடைபெறும்.

இப்போட்டிக்கான 30 வீரர்கள் கொண்ட பட்டியலை வரும் ஆகஸ்ட் 7ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டுமென்றும் அதிலிருந்து 14பேர் கொண்ட இறுதி பெயர்ப் பட்டியலை செப்டம்பர் 7ஆம் திகதிக்குள் வெளியிட வேண்டுமென்றும் ஐ.ஸி.ஸி உத்தரவிட்டுள்ளது.

மேலும் முதல்முறையாக அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. குழு ஏ இல் இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் தகுதிச் சுற்றில் இரண்டாம் இடம்பெறும் அணியும் பி யில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் நியூசிலாந்து மற்றும் தகுதிச்சுற்றில் முதலிடம் பெறும் அணி சேர்க்கப்படும்.

தகுதிச் சுற்றுப் போட்டியில் ஐ.ஸி.ஸி ஒருநாள்தரவரிசையில் ஏழு முதல் பத்து இடங்களை பிடித்துள்ள மேற்கிந்திய தீவுகள் இலங்கை, ஸிம்பாவே மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றுள்ளன.

தகுதிச் சற்று போட்டிகள் ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# கென்யா - பங்களாதேஷ் ஒருநாள் போட்டி ஆகஸ்ட் 12இல்

(தாகா)

பங்களாதேஷ் அணியின் கென்ய சுற்றுப்பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த அணி மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

பங்களாதேஷ் அணி கென்யாவில் ஜுலை 21இல் இருந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடும் என முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர் இதில் மாற்றம் செய்யப்பட்டது. இதன்படி பங்களாதேஷ் அணி கென்யாவுடன் மூன்று ஒருநாள் போட்டிக்ளில் மேதும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் 12இல் நடைபெறவுள்ளது. இத்தொடருக்கு பங்களாதேஷ் அணித்தலைவராக பாஷர் நீடிக்கிறார். கென்ய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அந்த அணி ஸிம்பாவே செல்கிறது. அங்கு ஐந்து ஒருநாள் போட்டிகளில் அந்த அணி பங்கேற்கிறது. பாஷர் (அணித் தலைவர்) கலீத் மசூத், ஜாவித் ஒமர், முகமது ரபீக், ராஜின் சாலே, அஷ்ர புல், மோர் தசா, அப்தாப் அகமது, முஷ்பிகுர் ரகிம், அலோக் கபாலி, ஷாரியார் நபீஸ், உசைன் சையத் ரசல், ரசாக் அல் ஹசன், போர்கத் ரெசா ஆகியோர் அணியில் இடம்பெறவுள்ளார்கள்.

# 34ஆம் நாளாக தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்





தமிழர் தாயகத்தில் நடைபெறும் தமிழ்மக்களின் மீதான படுகொலைக் களைக் கண்டித்து பிரான்சில் நடாத்தப்பட்டு வரும் கவனயீர்ப்பு உண்ணா விரதப் போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை 34 வது நாளாக இடம் பெற்றுள்ளது. இந் நிகழ்வினை காலை 10.00 மணிக்கு மேஜர் பிரியந்க ஸ்ரீதனின் சிறியதாயார் பொதுச்சுடரினை ஏற்றி அகவணக்கத்துடன் ஆரம்பித்வைத்தார்.

இந்நிகழ்வில் லூவர் தமிழ்ச்சங்கத்தினர் கலந்து சிறப்பித்தனர். இக்கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பல வெளிநாட்டு மக்களும் பிரெஞ்சுமக்களும் வருகை தந்திருந்தார்கள். தமிழ்மக்களின் மீதான படுகொலைகளையும் இன்றைய தாயக சூழ்நிலை பற்றி பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் விபரித்தனர்.

# முல்லைத்தீவுப் பகுதியிலும் ஒரு விமானத்தளம் அமைக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கை

முல்லைத்தீவு அருகே மேலும் ஒருவிமானத் தளத்தை விடுதலைப் புலிகள் அமைக்க திட்ட மிடுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை சிறிலங்கா விமானப்படையினர் வவுனியாவில் அடையாளம் தெரியாத விமானம் ஒன்று இரவு 8.30 மணியளவில் பறப்பதை ராடா மூலம் அவதானித்துள்ளனர். சிறிலங்கா பொலிஸாரும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியின் மேலாக அடையாளம் தெரியாத விமானம் பறந்த சத்தத்தைக் கேட்டதாகக் கூறியுள்ளனர்.

முன்னதாக இரவு நேரங்களில் புலிகளின் விமானிகள் இலகு ரக விமான பயிற்சிளை மேற்கொள்வதாக புலனாய்வுத்துறையினர் தெரிவித்திருந்தனர். தற்போது கெரில்லாப் போராளிகள் பரசூட்டுக்களை இரவு நேரங்களில் பயன்படுத்தி பயிற்சி எடுப்பதாகவும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். விமானத் தாக்குதல்களை நடத்துவதற்காக இப்பயிற்சிகள் அளிக்கப் பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அண்மைய விமானத் தாக்குதலில் சேதமடைந்திருந்த புலிகளின் இரணைமடு விமானத்தளம் சீரமைக்கப்பட்டுவிட்டது. 1.4 கிலோ மீற்றர் நீளமுள்ள அந்த விமான தளத்தில் சி-130 ஹெர்குலிஸ் உள்ளிட்ட நடுத்தர விமானங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இருப்பினும் விமான தளத்தின் ஓடுபாதைக்கு அருகாமையில் இருந்த கட்டிடம் பாரிய சேதத்துக்குள்ளானது. அக்கட்டடம் சீரமைக்கப்படவில்லை.

மேலும் முல்லைத்தீவு அருகே புதுகுடியிருப்பிலிருந்து தென்பகுதியில் 10 கிலோ மீற்றர் தொலைவில் பாரிய அளவிலான இடத்தை விடுதலைப்புலிகள் தூய்மைப்படுத்தி வருவதாக ஆளில்லா வேவு விமானங்கள் மூலம் விமானப்படையினர் அறிந்துள்ளனர். அனேகமாக அங்கேயும் ஒரு விமான தளத்தை விடுதலைப்புலிகள் அமைக்கக் கூடும் என்ற சந்தேகத்தை அது எழுப்பியுள்ளது. இரணைமடுக்கு மிக அருகாமையில் தென்கிழக்கில் மற்றொரு விமானத்தளத்தை விடுதலைப் புலிகள் ஏன் அமைக்கின்றனர் என்பது குறித்து சிறிலங்கா விமானப்படையினர் ஆச்சரியமடைந்துள்ளனர்.

பாரிய அளவிலான பிரதேசத்தை துப்பரவு செய்தமை விமானத்தளத்துக்காக இல்லையெனில் அது எதற்காக என்பது குறித்து விமானப் படையினரால் கண்டறிய இயலாமல் போகும் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அமெரிக்க விமானத்தளத்தில் கைதான இலங்கைத் தமிழர்களுக்கு பிணை மறுப்பு

அமெரிக்க ரோஸ்ரர் விமானத் தளத்தில் கைதுசெய்யப்பட்ட இரண்டு இலங்கைத்தமிழர்களுக்கும் பிணை வழங்க ரோஸ்ரர் பிராந்திய நீதிமன்றம் மறுத்துள்ளது.

இவர்கள் இருவரும் கடந்த இரு நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட எயர் கனடா விமானத்தில் இறுதிநேரத்தில் ஏற முயற்சித்த போது கைதுசெய்யப் பட்டனர்.

அத்துடன் மொழிப்பிரச்சினை காரணமாக குறித்த விமானத்தில் குண்டு இருப்பதாக எண்ணிய அதிகாரிகள் அதனை சோதனையும் செய்தனர். எனினும் குண்டுகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இதன் போது இலங்கை தமிழர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் இருவரும் போலியான கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தமை தொடர்பிலேயே இவர்கள் மீது குற்றம்சுமத்த முடியுமென்று சுட்டிக்காட்டினார்.

இதன் போது நீதிபதி கேட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதி வாதி தமது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் இலங்கையிலுள்ள அகதி முகாமில் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளத் தேவையில்லையென நீதிபதி குறிப்பிட்டுள்ளார். பிரதி வாதிகளான இரண்டு இலங்கைத் தமிழர்களும் தாம் 6 மாதங்களுக்கு முன்னர் அரசியல் அடைக்கலம் தேடி புறப்பட்டதாக தமது சாட்சியத்தில் தெரிவித்தனர்.

இதன் நிமித்தம் மலேசியா, தென்னாபிரிக்கா, பிரேசில், சிலி ஆகிய நாடுகளின் ஊடாக பயணித்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். இதேவேளை, இந்த இரு இலங்கையர்களும் குற்றவாளிகளாக காணப்பட்டால் அவர்களுக்கு 6 வருட சிறைத் தண்டனை வழங்க அமெரிக்க சட்டத்தில் இடம் இருப்பதாக அங்குள்ள சட்ட வியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9)

# இராசி பலன்

**24.07.2006**
**(ஆடி 8, திங்கட்கிழமை)**
**சதுர்த்தசி முற்பகல் 10.00மணிவரை**
**புனர்பூசம் பின்னிரவு 1.59 மணிவரை**
**இராகுகாலம் 7.32-9.02மணிவரை**
**சுபநேரம் 12.02-1.32 மணிவரை**
**ஆடி அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி, போசனசுகம். |
| இடபம் | உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம், பணவிரயம், ஆரோக்கியகுறைவு. |
| மிதுனம் | நல்ல முயற்சி, தெய்வசிந்தை, திடீர் நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, பிரயாணம், உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், கலந்துரையாடல், நல்ல செய்தி, தொழில் வருமானம். |
| கன்னி | கடினமுயற்சி, அதிகாரம், நண்பர்கள் உதவி, சுபசெய்தி. |
| துலாம் | காரியதாமதம், கட்டுப்பாடு, புதிய முயற்சி, பிதாசிந்தை. |
| விருச்சிகம் | உஷ்ண வியாதி, அமைதிக்குறைவு, வாகனபயம், முயற்சி தாமதம். |
| தனுசு | புதிய தகவல், காரிய அனுகூலம், போசன சுகம், குடும்பமகிழ்ச்சி. |
| மகரம் | பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி, உடல்நலம். |
| கும்பம் | முயற்சிதாமதம், பணக்குறைவு, சிந்தனை மிகுதி, போசனசுகம். |
| மீனம் | புதிய விடயம், தாய்வழி உறவு, சுப செலவு, முயற்சிதாமதம். |

- வளவன்

# திருட்டு முயற்சி தோல்வி

யாழ்.மார்பு நோய் வைத்திய சாலைக்கு அருகில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பெண் ஒருவரின் தாலிக்கொடியை அபகரிக்க திருடன் ஒருவன் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

கழுத்தில் தாலிக்கொடியுடன் சென்ற இப் பெண்ணைப் பின்தொடர்ந்த திருடன் ஒருவன், அதனை அறுக்க அப் பெண்ணின் கழுத்தில் கைவைத்தபோது அப்பெண் எழுப்பிய கூச்சலால் ஆட்கள் ஓடிவரவே, திருடன் திருட்டுமுயற்சியைக் கைவிட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டான். (து-72)

# வளமற்ற நிலையில் வடகடல் கம்பனிகள்

1968ஆம் ஆண்டு நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட சீநோர் நிறுவனத்தின் வட பகுதி தொழிற்சாலைகள் வரையறுக்கப்பட்ட வட கடல் கம்பனிகள் என்ற பெயரில் தற்போது இயங்குகின்றன.

மீன்பிடிவலை, மீன்பிடிப்படகுகள், ஐஸ்கட்டிகள் என்பவற்றை உற்பத்தி செய்வதோடு மீன்களை பதப்படுத்தல், உள்ளூர் வெளியூர் சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களோடு இயங்கி வரும் இக் கம்பனி ஒரு காலத்தில் எமது தேசத்திற்கு பொருளாதார வளம் சேர்த்த நிறுவனமாகும். ஆனால் இன்றுதனது தொழிலாளர்களைக்கூட போஷிக்க முடியாதநிலையில் இதுஉள்ளதாகத் தெரிகிறது.

கடந்த காலங்களில் இந்நிறுவனங்கள் ஈட்டிய இலாபம் காரணமாக தென்னிலங்கையில் நிறுவப்பட்ட கிளை நிறுவனங்கள் இன்றும் வெற்றிகரமாக செயற்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இக் கம்பனி திறம்பட விஸ்தரிக்கப்பட்டு செயற்பட ஆரம்பிக்குமானால், பாஸ் நடைமுறை, ஒரு படகில் செல்லும் மீனவர்களின் எண்ணிக்கையை மட்டுப் படுத்தல் ஆகியவற்றினால் தொழிற்வாய்ப்பற்றிருக்கும் மீனவர்களின் மனித வளத்தை பூரணமாக பயன் படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும். தற்போது இயங்கி வருகின்ற சிறிய ஐஸ் உற்பத்தி நிலையம், வள்ளம் கட்டும் தொழில் ஆகியவற்றில் குறைந்தளவிலானோரே தொழில் வாய்ப்பை பெறுகின்றனர்.

1990ஆம் ஆண்டுகளுக்கு முன் ஏழு வள்ளம் கட்டும் நிலையமும் இரண்டு பெரிய ஐஸ்தொழிற்சாலைகள் இயங்கி வந்துள்ளன. எனவே அதிகரித்துள்ள மனித வளத்தை பூரணமாக பயன்படுத்தத் தக்க வகையிலும், உற்பத்திச் செலவை குறைக்கக்கூடிய முறையிலும் வட கடல் கம்பனிகளை இயங்க வைப்பின் வலை, வள்ளம், புடவை போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடியதான வேலை வாய்ப்புக்களை வடகடல் கம்பனிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என மீனவர்கள் தரப்பில் தெரிவிக் கப்படுகிறது. (து-36)

# மீண்டும் அரசியல் களத்தில் பிரவேசிக்க சந்திரிகா முடிவு!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் அரசியல் செயற்பாடுகளில் பிரவேசிக்கத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில் இலங்கை திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு காரணமே அவர் உடனடியாக நாடு திரும்பாமல் இருப்பதற்கான ஒரே தடை என்றும் புலனாய்வுத்துறையினர் அண்மையில் வழங்கிய அறிக்கையில் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி புதிய யாப்பு திருத்தத்தின் மூலம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலக்கப் பட்டுள்ள போதிலும் அவர் கட்சியின் போசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் கட்சிக்குள் இருந்தவாறே அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதற்குதற்போதைய தலைமைத்துவம் குறுக்கீடாக அமையுமானால் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் செயற்பாடுகளை அவர் மேற்கொள்ளலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-9)


## அன்பு வாசகர்களே!

நல்லூர்க் கந்தனின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வலம்புரியில் இம்முறையும்

"நல்லூர் கந்தன் பாமாலை"

வெளிவரவுள்ளது. நல்லூரானைத் துதி செய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நல்லூர்க் கந்தன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# கர்ம்வீரர் காமராஜர்

## மீள்பார்வை 34

முருக-தனுஷ்கோடி



ராஜாஜியின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர எதிர்க்கட்சியினர் முடிவு செய்தனர். அதற்காக கையெழுத்து வாங்கவும் தொடங்கினார்கள். மெஜாரிட்டியும் கிடைத்தது. நம்பிக்கை இருக்கிறது என்ற தீர்மானத்துக்குக் கையெழுத்து வாங்க ராஜாஜி கோஷ்டியர் முயன்றனர். இதற்கு ஆதரவு கிடைக்காததால் நெருக்கடி அதிகமாகியது.

நெருக்கடி முற்றியதைக் கண்ட மேலிடம் காமராஜையும் ராஜாஜியையும் டெல்லிக்கு அழைத்தது. இருவருடனும் மேலிடத்தினர் பேசினார்கள். பிறகு நேருஜி ஓர் அறிக்கை வெளியிட்டார். ராஜாஜியே தொடர்ந்து முதல் மந்திரியாக இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் நேருஜி குறிப்பிட்டிருந்தார்.

நேருஜியின் அறிக்கையைப் பார்த்ததும் டி.ஜி கிருஷ்ணமூர்த்தியும், பஞ்சாட்சரம் செட்டியாரும், ஏ.எம் சம்பந்தமும் டெல்லி சென்றனர். தமிழ் நாட்டில் உள்ள உண்மையான நிலைமையை நேருஜியிடம் எடுத்துக் கூறினார்கள். தூதுக் குழுவினர் கூறியதை நேருஜி கேட்டு உங்கள் ஆட்சியில் நீங்கள் எப்படியும் தீர்மானம் செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது என்று சொன்னார். உடனே ராஜாஜியின் நிலைமை மீண்டும் நெருக்கடிக்குள்ளானது.

1954 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது.

கல்வித் திட்டத்தின் மீது ஓட்டெடுத்து என்னை அவமானப்படுத்த வேண்டாம். நான் விலகிக் கொள்கிறேன் என்று ராஜாஜி அப்போது அறிவித்தார். ஓட்டெடுக்க வேண்டாம், ஒத்திவைப்போம் என்று காமராஜ் அப்போது கூறியதால், கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

ராஜிநாமா செய்வதற்கு முன்பு ராஜாஜி பக்தவத்சலத்தை அழைத்துப் பேசினார். அப்போது பக்தவத்சலம் ராஜாஜிடம் பின் கண்டவாறு கூறினார்.

இந்தத் தகராறு தீர நீங்கள் காமராஜை அழைத்துப் பேசவேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை. காமராஜ் சிபாரிசுகளைக் கவனிப்பவரல்ல. அதைச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என அவர் மந்திரிகளிடம் போய்ச் சொல்லியதில்லை. சொந்த விருப்பு வெறுப்பு எதுவும் அவருக்கு மந்திரிசபை மீது இல்லை. உள்ளதை அப்படியே சொல்கிறார். அவர் சொல்லிய பின் அவர் நண்பர்கள் மீறிப் போகக் கூடியவர்கள் அல்லர். அவரைச் சந்தித்து விஷயத்தை விளக்கி அவர் சந்தேகத்தைப் போக்குவதுதான் ஒரேவழி.

டாக்டர் வரதராஜுலு நாயுடு, வி.கே. ராமசாமி முதலியார், கோசல்ராம், டி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, பஞ்சாட்சரம் செட்டியார், ஏ.எம் சம்பந்தம் ஆகியோர் சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குள், ராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, பின்னால் ராஜாஜியின் தலைமையையே எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியவர்கள் ஆவார்கள். டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட ராஜாஜி பயமுறுத்தினார்.

மூன்று பேர் கொண்ட தூது கோஷ்டியினர் மட்டும் டெல்லி சென்று, நேருஜியைச் சந்தித்து நிலைமைகளைச் சொல்லியிருக்காவிட்டால், சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் அரசியலில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கும்.

விலகுவதாக ராஜாஜி அறிவித்தது கண்டு மேலிடம் கருத்து எதுவும் தெரிவிக்காமல் தலைவர் தேர்தலை நடத்தும்படி உத்தரவிட்டது.

## முதல் மந்திரி காமராஜ்

உடல் சுகவீனம் காரணமாக வராமல் இருந்த ராஜாஜி 1954ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி திடீர் என்று சட்டசபைக்கு வந்தார்.

எனக்கு உடல்நிலை சரியில்லை. ஆகவே முதல் மந்திரி பதவியில் இருந்து விலகிக் கொள்ளுகிறேன் என்று அப்போது சட்டசபையில் ராஜாஜி அறிவித்தார்.

அன்று மாலையே சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் நடைபெறுவதற்கு முன் காமராஜும் ராஜாஜியும் சந்தித்துப் பேசினார்கள். இப்போது மந்திரியாய் உள்ள ஒருவரையே முதல் மந்திரியாக இரண்டு மூன்று மாதங்களுக்கு வைத்துக் கொள்வோம். பட்ஜட் கூட்டம் முடிந்த பிறகு கட்சித் தலைவர் தேர்தலை நடத்தலாம் என்று ராஜாஜி காமராஜிடம் கூறினார்.

பக்தவத்சலம், ஷெட்டி, சி.சுப்பிரமணியம் ஆகிய மூவரில் யாரையாவது ஒருவரை இரண்டு மாதங்களுக்கு முதல் மந்திரியாக வைத்துக் கொள்வோம் என்று சொல்லி ராஜாஜி கூறியதைக் காமராஜ் அப்போது ஏற்றுக்கொண்டார்.

பிறகு சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் சுப்பிரமணியம் பெயரை ராஜாஜி முன்மொழிந்து சுப்ரமணியம் பெயரை ராஜாஜி முன்மொழிந்து சுப்ரமணியம் முதல் மந்திரியாக இருப்பார் என்று மட்டும் கூறினார். காமராஜிடம் முன்னதாகக் கூறியபடி இரண்டு மாதங்களுக்குத்தான் இந்த ஏற்பாடு; பின்னர் கட்சித் தலைவர் தேர்தலை நடத்தலாம் 'என ராஜாஜி அப்போது கூறவில்லை.

உடனே காமராஜ் எழுந்தார். இந்த ஏற்பாட்டை பட்ஜட் கூட்டத்தை ஒட்டி இரண்டு மாதத்துக்குத் தான் தாம் ஒப்புக்கொண்டதாகக் காமராஜ் கூறினார்.

ராஜாஜி இதை ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே கூட்டத்தில் ராஜாஜி எதிர்ப்புக் குரல் கிளம்பியது. ஆட்சேபனை அதிகமாகியது. சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலையே நடத்த வேண்டும் என்று உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். 30 ஆம் திகதி நடத்தி விடலாம் என்று ராஜாஜி கூறினார். தலைவர் தேர்தலுக்கு நான்கு நாட்கள் அவகாசம் என்பது மிகவும் குறைவானது என்று உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவித்தனர். 30 ஆம் திகதி தலைவர் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்றார் ராஜாஜி.

நாட்கள் குறைவாக இருந்ததால் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்வதில் சிரமம் இருந்தது. ராஜாஜி மந்திரி சபையில் உள்ளதில் ஷெட்டி ஒருவரைத்தான் ராஜாஜி எதிர்ப்புக் கோஷ்டியினர் ஒப்புக்கொள்வார்கள் என்ற நிலை இருந்தது. ஆனால் ராஜாஜி கோஷ்டியினர் சி.சுப்ரமணியத்தை நிறுத்துவது என முடிவு செய்தனர். டாக்டர் சுப்பராயனை நிறுத்தலாம் என்றும் யோசனை இருந்தது. 30 ஆம் திகதி காலையில் சென்னை வருவதாய் இருந்த சுப்பராயன் வரவில்லை. சுப்பராயன் வந்திருந்தால் அவர்கூட நிறுத்தப்பட்டிருக்கலாம்.


சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகக் காமராஜே வர வேண்டும் எனக் காமராஜின் நண்பர்கள் வற்புறுத்தினார்கள். கடைசியில் காமராஜ் சம்மதம் தெரிவித்தார். அப்போது மாலை 3மணி. தலைவர் தேர்தலுக்குக் காமராஜே நிற்கப் போவதாக எடுத்த முடிவைக் கேட்டு ராஜாஜி கோஷ்டியினர் அதிர்ச்சியடைந்தனர். காமராஜ் தேர்தலில் நிற்பார் என ராஜாஜி கோஷ்டியினர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஆரம்பமானதும், காமராஜிடம் சுப்ரமணியம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். சமரசம் பேசுவதற்காகக் கூட்டத்தை ஒத்திப்போடும்படி சுப்ரமணியம் கேட்டுக் கொண்டார்.

(தொடரும்)

# கறுப்பு யூலை நினைவு நாள்



(கொழும்பு)

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் "வாழ்விலும் சாவோம்" என்ற முழக்கத்துடன் 1983ல் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட "கறுப்பு யூலை" இனப்படுகொலையை நினைவு கூர்கின்றார்கள். தென்னாபிரிக்கத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கறுப்பு யூலையை நினைவு கூரும் முகமாக மூன்று நாள் விழிப்புணர்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்ச்சியின் முதலாவது நாள் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்துபோகும் சற்ஸ்வேத் சென்ரரில் முதலாவது நாள் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

தமிழீழ வரலாற்றையும் தமிழீழத்தின் தற்போதைய நிலவரங்களையும் தெளிவுபடுத்துகின்ற ஒளிப் படக்காட்சிகள் அகலத்திரையில் காண்பிக்கப்பட்டன.

தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் தமிழ்மிரர் செய்தி ஏடு இலவசமாக விநியோகிக்கப்பட்டதுடன் இலங்கை அரச படைகள் தமிழ் மக்கள் மீது இழைத்துவருகின்ற அட்டூழியங்கள் பற்றி ஈழப்பிரச்சினை தொடர்பாக ஆர்வங் கொண்ட மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. பல மக்கள் இவ் வொளித் தட்டுப் பிரதிகளைக் கோரியிருந்தனர். இவ் விழிப் புணர்வு நிகழ்வு 25 ஆம் திகதிவரை தொடரப்படவுள்ளது. (அ)

# அரச சாரா நிறுவனங்களின் செயற்பாடுகளை பகிரங்கப்படுத்துமாறு அரசு கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்காவில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கெடுபிடிகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் இறுக்கி வருகிறது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் அதன் வளங்கள், செயற்பாடுகளை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரது கெடுபிடித் தடைகளால் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரசாங்கம் விளக்கமளித்துள்ளது. இனப்பிரச்சினை நிகழும் பகுதிகளில் இரு தரப்பினரும் சந்தேகிக்கக் கூடிய நிலைமை இருக்கத்தான் செய்யும். ஆகையால் இந்த கெடுபிடிகளுக்குட்பட்டுத்தான் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் விலகிக் கொள்ளலாம் என்று மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரச்சினைக்குரிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காகவும் இத்தகைய முடிவு மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இக் கெடுபிடிகள் குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் நிர்வாக இயக்குநர் ஜீவன் தியாகராஜா கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்து 2.6 மற்றும் 2:7 இன் கீழ் இராணுவம் தொடர்பில்லாத பொருட்கள் விடுதலைப் புலிகளின் பகுதிக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வரும் நிலையில் புதிய புதிய நடைமுறைகளை அரசாங்கம் தெரிவித்துள்ளமை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அந்த சரத்து திருத்தம் செய்யப்பட்டு விட்டதா? என விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றார். (அ)

# வடக்கு-கிழக்கைப் பிரிக்க கையெழுத்து வேட்டை


வடக்கு- கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரிக்க கோரி 10 இலட்சம் பேரிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை ஒன்று இன்று ஆரம்பமாகியுள்ளது. இதனை புதிய தலைமுறை என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் முதற்கட்டமாக களுத்துறையில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு -கிழக்கை ஒன்றாக இணைத்தமை துரோகத்தனமான செயல் எனவும், வடக்கு -கிழக்கை அரசியல் ரீதியாகவோ பௌதிக ரீதியாகவோ பிரிக்க முடியாது என தெரிவித்துள்ள அந்த அமைப்பு வடக்கு-கிழக்கைப் பிரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# தேர்தல் அறிக்கையைப் பிரதிபலிக்கும் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை

தமிழக சட்டமன்றத்தேர்தல் பிரச்சாரத்தின் போது கடந்த தேர்தலில் வெற்றிபெற்று தி.மு.க.ஆட்சி அமைத்தல், தி.மு.கவின் தேர்தல் அறிக்கையே அதன் மூலம் நிதி நிலை அறிக்கையாக அமையும் என்று தி.மு.க தலைவர் மு.கருணாநிதி மேடைக்கு மேடை கூறிவந்தார்.

ஏறக்குறைய அதை மெய்ப்பிக்கும்



வகையில் தமிழக நிதியமைச்சர் க.அன்பழகன், சட்டமன்றத்தில் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கை என்பது பெருமளவு தி.மு.க தேர்தல் அறிக்கையின் மறு வாசிப்பாகவே இருந்தது. வித விதமான சலுகைகள் பிரம்மாண்ட திட்டங்களுக்கான அறிவிப்புகளை தாங்கி வந்திருக்கும் 2006, 2007ஆம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்பது முக்கிய அம்சம்.

இந்த ஆண்டுக்கான மொத்த அரசு வருவாய் 38 ஆயிரம் கோடியே 731 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கான மொத்த செலவு 39ஆயிரம் கோடியே 860 இலட்சமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது 1129 கோடி ரூபாய் பற்றாக்குறையாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக தள்ளிப்போடப்பட்டுவந்த மதிப்புக் கூடுதல் வரிவிதிப்பு முறை 2007ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் அமுல்படுத்தப்படும் என்றும் தமிழ் நாட்டிற்குள் வியாபாரம்செய்யும் வணிகர்களில், ஆண்டு வியாபாரம் 10 இலட்சரூபாயை தாண்டாதவர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு, பயறு வகைகள், சமையல் எண்ணெய் மீது முழுவரி விலக்கு அறிவிக் கப்பட்டுள்ளது. இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித் தொகை 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தப்படுவதாகவும், சுனாமி நிவாரணப் பணிகளுக்கு மேலும் ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும். சாலை விபத்துக்களை குறைக்கும் நோக்கில் குடித்துவிட்டு வாகனங்கள் ஓட்டுபவர்களின் ஓட்டுனர் உரிமத்தை ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் சுமார் 7000 கோடியை தள்ளுபடி செய்துள்ள நிலையில் விவசாயிகளுக்கான பயிர்க் கடனின் வட்டி விகிதம் குறைக்கப்படுவதாகவும் அன்பழகன் அறிவித்தார்.

45,957 ஒப்பந்த ஆசிரியர்களின் பணி நிரந்தரமாக்கப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றும் கடந்த அ.தி.மு.க ஆட்சியின்போது வேலைநிறுத்தத் தின் போது உயிரிழந்த அரசு ஊழியர்கள் ஆசிரியர்



களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி அளிக்கப்படும் என்றும், அரசு ஊழியர்கள் 30 ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் அளிக்கப்படும் என் றும் உறுதியளித்தார் அன்பழகன்.

காவலர்களின் நலனுக்காகவும் காவலர்கள் குறை தீர்க்கவும் 3ஆவது காவலர் ஆணையம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழிலேயே பெயர் சூட்டப்படும் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி முழுமையாக ரத்து செய்யப்படும் என்றும் அன்பழகன் அறிவித்தார்.

சத்யராஜ் நடிக்கும் பெரியார் திரைப்படத்திற்கு தமிழக அரசு ரூ.95இலட்சம் நிதியுதவி அளிக்கப்போவதாகவும் அவர் அறிவித்தார். சென்னை தரமணியில் 2ஆவது டைடல் பூங்கா அமைப்பதோடு, கோவையிலும் டைடல் பூங்காவை அமைக்கப்போவதாகவும் இன்போசிஸ் நிறுவனம் மூலம் கணனி மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்போதவதாகவும் தமிழகத்தில் கம்யூட்டர் தயாரிப்பில் ஈடுபட முன்வரும் நிறுவனங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு எந்தவித உச்சவரம்புமின்றி வரிவிலக்கு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை அருகே ஒரகடம் என்ற இடத்தில் வாகனச் சோதனை மையம் அமைய 300 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அதற்கான பணிகள் முடுக்கிவிடப்படும். உலக அளவில் பின்னலாடை உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் திருப்பூரின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் நோக்கத்துடன் திருப்பூர் மாநகராட்சியாக உயர்த்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# லெபனான் மீது 11ஆவது நாளாக தாக்குதல் முக்கிய கிராமத்தை இஸ்ரேல்படை பிடித்தது

இஸ்ரேலின் 2 இராணுவ வீரர்களை லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் கடத்திச்சென்றதைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவம் லெபனான் மீது கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. 11ஆவது நாளாக இந்த தாக்குதல் நீடித்தது.

லெபனானின் பெய்ரூட் நகரம் மீது இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து வருகிறது. தென்பகுதியில் தரைப்படையும் லெபனானுக்குள் முன்னேறிச் சென்று பீரங்கி தாக்குதல் நடத்திவருகிறது. இன்று லெபனானின் சைடான் நகரில்உள்ள மசூதி இடித்து தரை மட்டம் ஆனது. 4 பேர் இதில் காயம் அடைந்தனர். அந்தபகுதியில் 35 ஆயிரம் பேர் அகதிகளாக தங்கி இருந்தனர்.

பெய்ரூட் நகரிலும் நேற்று விமானங்கள் குண்டு வீசின . இதில் ஹிஸ்புல்லா தலைவர் ஷேக்ஹசன் நசரல்லாவின் வீடு தரைமட்டமானது.

பெய்ரூட்நகரின் வடக்கு பகுதியில் தொலை தொடர்பு மற்றும் டெலிவிஷன் கோபுரம் மீதும் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசின. இதில் அந்த கோபுரம் தகர்க்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து டெலிவிஷன் ஒளிப்பரப்பு, செல்போன் சேவை ஆகியவை அடியோடு பாதிக்கப்பட்டது.

இஸ்ரேல் தரைப்படையினர் லெபனானின் எல்லைப் பகுதியில் உள்ள மருன் அல்ராஸ் கிராமத்தை பிடித்துவிட்டது. ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் கோட்டையாக இந்த கிராமம் திகழ்கிறது. ஆனால் அதை சுற்றி உள்ள கிராமங்களில் இஸ்ரேல் பீரங்கி படைக்கும் ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் இடையே தொடர்ந்து கடும் சண்டை நடந்து வருகிறது. நேற்று நடந்த தாக்குதலின்போது ஹிஸ்புல்லா இயக்கத்தினர் 40க்கும் மேற்பட்ட ராக்கெட்டுக்களை வீசி இஸ்ரேல் பீரங்கிகளை அழித்தனர். (அ)



லெபனானில் இருந்து வெளியேறும் ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த ஒரு பெண், தன் தந்தையை கட்டி தழுவி அழுகிறாள்


# ஈராக்கில் இருந்து அமெரிக்கப்படை விலகாது

ஈராக்கில் அடுத்த மாதத்தில் அமெரிக்க துருப்புகளை நிறுத்துவது தொடர்பாக முன்னர் திட்டமிடப்பட்டு இருந்ததினையே செயற்படுத்த அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் முடிவு செய்து இருப்பதாக வாஷிங்டனில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துருப்புகளை நிறுத்தலாமா அல்லது நிறுத்தும் திட்டத்தினை கைவிடலாமா என பல வாரங்களாக நடைபெற்ற உள் விவாதங்களின் முடிவில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் இருந்து துருப்புகளை திரும்ப பெறுவதினை விட, தற்போது இருக்கும் நிலையே தொடர்ந்து நீடிக்க இராணுவம் நினைக்கின்றது என அமெரிக்க பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆசோசியேடட் பிரஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

இந் நேரத்தில் ஈராக்கில் நடைபெற்ற சமீபத்திய வன்முறையில் குறைந்தபட்சம் பதின்




மூன்றுபேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மேற்கு பக்தாத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ஏழு ஷியா பணியாளர்களும் அடங்கு வர். (அ)

# இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் அமெரிக்கக் கப்பல்

லெபனான் நாட்டின் மீது இஸ்ரேல் நாடு கடந்த 10 நாட்களாக தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த நாட்டின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளை குறிவைத்து தலைநகரம் பெய்ரூட் மற்றும் சில நகரங்கள் மீது இஸ்ரேல் விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஏராளமாக கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகிவிட்டன.

லெபனான் நாட்டில் வேலை பார்த்து வந்த இந்தியா உட்பட பலவெளி நாட்டினரும் அங்கிருந்து தங்களது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தாய் நாட்டுக்கு திரும்பி வருகிறார்கள். தாக்குதலை தொடங்கிய போதே தங்களுக்கு வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை அனுப்பிவைக்கும்படி இஸ்ரேல் தனது தீவிர ஆதரவு நாடான அமெரிக்காவை கேட்டு இருந்தது. ஆனால் போர் தொடங்கி 10 நாட்கள் ஆகியும் அமெரிக்க ஆயுதங்கள் வந்து சேராததால் விரைவாக அனுப்பி வைக்கும்படி இஸ்ரேல் கேட்டுக் கொண்டது.

அதன்படி நேற்று நவீன வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்கள் நிரப்பிய ஒரு கப்பல் இஸ்ரேலுக்கு அமெரிக்காவில் இருந்து புறப்பட்டதாக அமெரிக்காவின் நியூயோர்க்டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் இந்த தகவலை தெரிவித்த அதிகாரியின் பெயரை அந்தப் பத்திரிகை வெளியிடவில்லை.

அமெரிக்க அதிபர் புஷ் மற்றும் உயர் அதிகாரிகளிடையே ஆயுதங்கள் அனுப்புவது தொடர்பாக சிறிது விவாதம் நடந்த பிறகே ஆயுதக் கப்பலை அனுப்பமுடிவு எடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்ததாக செய்தியில் கூறப்பட்டுள்ளது.

லெபனானுக்கு ஈரான் ஆயுத சப்ளை செய்து வருகிறது. இது சில நாடுகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளை அனுப்பி இருப்பது அரபு நாடுகளுக்கு ஒரு வகை மிரட்டல் என்றும் இந்த சம்பவம் அந்த அரபு நாடுகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது என் றும் அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா ஆயுதங்களை இப்போது அனுப்பி இருப்பது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை ஆதரிக்க அல்ல என்றும், கடந்த ஆண்டே இஸ்ரேல் பல கோடி டாலர் மதிப்புள்ள ஆயுதங்கள் வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் செய்து அந்த வியாபாரத்தின் அடிப்படையிலேயே ஆயுத கப்பல் அனுப்பப் பட்டு இருப்பதாகவும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆனால் இப்படி திடீரென ஆயுதங்கள் அனுப்பப்படுவது வழக்கத்துக்கு மாறானது என்றும், இஸ்ரேல் லெபனான் நாட்டில் பல இடங்களில் தாக்குதல் நடத்துவதற்காகவே கேட்டு, அதன்படி அனுப்பப்படுகிறது என்றும் சில இராணுவ அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் இருந்து ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கப்பல் புறப்பட்ட விஷயம் பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை. ரகசியமாக புறப்பட்ட இந்த கப்பலில் அமெரிக்க ஊழியர்கள் இருவரும் அனுப்பப்பட்டுள்ளனர். எவ்வளவு ஆயுதங்கள் அனுப்பப்பட்டு உள்ளன என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகளோ இராணுவத் தலைமையகமான பென்டகன் அலுவலகமோ தெரிவிக்கவில்லை. ஆனால் 1973 ஆம்ஆண்டில் நடந்த அரபு இஸ் ரேல் போரின்போது அனுப்பப்பட்டதுபோல இதை ஒப்பிடக்கூடாது என்று அதிகாரிகள் கூறியதாக நியூயோர்க்டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. (அ)

ஒவ்வொருவரும் தனது சொந்த நலனைப் பொருட்படுத்தாமல் நாட்டு நலனும், சமுதாய முன்னேற்றமுமே பெரிதெனக் கருதிப் பாடுபட வேண்டும்.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# கண்காணிப்புக் குழுவின் பணி எதுவரை நீடித்துச் செல்லும்?

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை தற்போது நடைமுறையில் இருக்கின்றதா? என்ற கேள்வி தேவையற்றதாகி விட்டது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருப்பதாக விருந்தால், நாட்டில் அமைதி நிலை நீடிக்க வேண்டும். வீதிகள் தோறும் படையினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்வதெல்லாம் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு உகந்ததல்ல.

எனவே யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்றதா? என்ற ஆய்வுத் தேடல்கள் தேவையற்றவையே.

எனினும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழு இருப்பதுதான் ஆச்சரியமான விடயம்.

அதாவது, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு முழுமையாகச் செயற்பட்ட காலத்திலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கை செயலிழந்து போயிற்று.

யுத்தநிறுத்த உடன்படிக்கை செயலிழந்து போனமைக்குக் கண்காணிப்புக் குழு எவ்வகையிலும் காரணமல்ல.

மாறாக யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஆகக்கூடிய ஆயுட்காலம் இரண்டு வருடங்களாகவே இருக்கும். அந்த எல்லைக்குள் இனப்பிரச்சினைக்கு முடிபு கட்டியிருக்க வேண்டும்.

எனினும் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துவிட்டால் அது இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டமைக்கு ஒப்பானது என இலங்கை அரசு கருதியது. அதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காமல் காலம் கடத்தியது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாதென்பது தெரிந்த விடயமாயினும் யுத்தநிறுத்த உடன்படிக்கையோடு காலத்தைக் கடத்திவிட்டால், தமிழர்கள் தமது போராட்டத்தில் வலுவிழந்து போவார்கள் என்பதும் அரசின் நிலைப்பாடு.இதன் காரணமாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதனையும் அரசு முன்வைக்கவில்லை. இதன் விளைவாகவே யுத்தநிறுத்த உடன்படிக்கை வலிமையிழந்து போயிற்று.

இங்குதான் கண்காணிப்புக் குழு விட்ட தவறு தெரிகிறது. அதாவது, யுத்தநிறுத்த உடன்படிக்கையை நீண்ட காலத்திற்கு கண்காணிக்க முடியாது. அதனை ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என்ற உண்மையை கண்காணிப்புக் குழு அரசுக்கு அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நான்கு ஐந்து வருடங்களாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை கண்காணிப்புக் குழு தெரிவிக்கத் தவறியமை அதன் அனுபவம் அற்ற செயற்பாட்டையே காட்டுவதாகும்.

இந்நிலையில், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தற்போது இயங்குவதென்பது சாத்தியப்பாடானதோர் விடயமாகத் தெரியவில்லை.

ஆக, இனிமேல் இலங்கைத் தீவில் சமாதானம் ஏற்பட வேண்டும், துப்பாக்கி வேட்டுக்கள் ஓய்வு பெற வேண்டும் என யாரேனும் விரும்புவார்களாயின், அதற்கான ஒரேவழி சமாதானப் பேச்சை உடனடியாக ஆரம்பிப்பதாகவே இருக்கும்.

அதற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்ன? என்பதை அரசு வரையறை செய்து கொள்வது கட்டாயமானதாகும்.

# அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் இணைந்து செயற்படவேண்டும்- ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டிற்கு நன்மை ஏற்படும் விதத்தில் ஊடகத்துறையை பலமடையச்செய்வதற்காக அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் இணைந்து செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படத்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

ஊடகங்களில் ஒலிபரப்பப்படும் வெளிநாட்டு நிகழ்ச்சிகள் மீது அரசாங்கம் அண்மையில் விதித்த வரி தொடர்பாக இங்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்ற வெளிநாட்டு நிகழ்ச்சிகளுக்கு வரி விதிப்பதில் அதிகூடிய கவனம் செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து இலத்திரனியல் ஊடகங்களுக்கும் பொறுப்பானவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இது தொடர்பாக எதிர்காலத்தில் உறுதியான தீர்மானங்களை எடுக்கவிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள அரசாங்கத்தினால் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவிருப்பதாகவும் இவற்றின் ஒழுங்கமைப்புக்கு புதிய சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற ஆலோசித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# எரிபொருள் விலை ஏற்றமில்லை கூட்டுத்தாபனத்தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

எண்ணை விலையை அதிகரிக்காமல் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்வதற்கு திறைசேரியிடமிருந்து நிதியுதவி பெற்றுக்கொள்ளப்படுமென்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி திறைசேரியுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

மத்திய கிழக்கில் இடம்பெறும் பிரச்சினைகள் காரணமாக எண்ணை விலை அதிகரித்துள்ளது. தற்போது இடம்பெறும் லெபனான் யுத்தமும் இலங்கையின் எண்ணை விலையில் கூடுதலான தாக்கத்தை செலுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் தற்போதைய விலையை தொடர்ந்தும் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# புள்ளி விபரம் சேகரிப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் வசிப்பவர்களின் புள்ளி விபரம் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. வீட்டில் உள்ளவர்கள் எண்ணிக்கை, சுகாதார வசதிகள், கழிவகற்றும் முறை வளர்ப்புப் பிராணிகளின் தகவல், பயன் தரு மரங்கள் மற்றும் பொது விடயங்கள் காவு அடிப்படையில் பெறப்படுகின்றன. இப்பகுதியில் வசிப்பவர்கள் இப்பணியில் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ-75)

# புஞ்சிநிலமேயின் பதவியை பறிக்க மஹிந்தயோசனை

(கொழும்பு

இலங்கைப் பிரதியமைச்சராக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த சுசந்த புஞ்சி நிலமே நீக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நாலந்த எல்லாவெல படுகொலைக்கு காரணமாக இருந்த சுசந்த புஞ்நிலமேவை அரசாங்கத்தில் மஹிந்த ராஜபக்ஷ இணைத்துக்கொண்டதற்கு அமைச்சர்கள் பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

பிரதியமைச்சராக உள்ள டிலான் பெரேரா பகிரங்கமாக விமர்சித்தும் இருந்தார். தேர்தல் ஒன்று நடைபெற்றால் புஞ்சிநிலமேவால் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக வாக்குகளைப்பெறமுடியாது என்றும் மஹிந்தவிடம் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆகையால் புஞ்சிநிலமேயின் பதவியைப் பறிக்க மஹிந்த யோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# தொண்டு நிறுவனங்களின் பணி பாதில் முடங்கும் அபாயம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் செயற்பட்டு வரும் உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களினது பணியாளர்களுக்கெதிராக படையிர் மேற்கொண்டுவரும் தாக்குதல்க்ள் மற்றும் அச்சுறுத்தல்களால் எதிர்வரும் காலங்களில் அவற்றின் பணிகள் முடங்கிப்போகலாமென அஞ்சப்படுகின்றது.

கடந்த வியாழனன்று வரணிப் பகுதியில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வெளிக்களப்பணியாளரொருவர் படையினரால் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டுள்ளதாகவும் தாவளை இயற்றாலைப் பகுதியிலுள்ள மினிமுகாம் பதுங்குகுழியொன்றினுள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் நீண்ட நேரமாக படையினரால் இவர் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளதகவும் இவரது ஆட்பதிவுத்திணைக்கள அடையாள அட்டையும் பறித்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கடந்த வாரம் 3325 பேர் நாய்க்கடிக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விலங்கு விசர் நாய்க் கடியை தடுப்பதற்கு பல்வேறு வகையில் செயற்திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்ப்பாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கடமைபுரியும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு விசர் நாய்க் கடி தொடர்பாக சமூக மட்டத்தில் செயற்படுத்தவேண்டிய செயற்திட்டங்கள் பற்றி விசேட கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடம் மட்டும் யாழ்.மாவட்டத்தில் 3325பேர் நாய்க்கடிக்கு இலக்காகி வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று தடுப் பூசியைப்பெற்றுள்ளார்கள் .

இந்த வருடம் இத்தொகை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அத்துடன் கடந்த வருடம் நாய்க்கடிக்கு இலக்காகி ஊசி இடப்படாது யாழ்.மாவட்டத்தில் ஐந்து பேர் மரணமடைந்துள்ளார்கள். அதேவேளை இவ்வருடம் முதல் 6 மாதத்தில் மட்டும் 4 பேர் மரணமடைந்துள்ளனர்.

எனவே இம் மரண விகிதத்தைக் குறைப்பதற்கு நாய்க்கடியில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்கும் இயலுமான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக பணிப்பாளர் தெளிவாக எடுத்துரைத்தார்.

அத்துடன் பொதுமக்கள் கூடும் இடங்களான சந்தைகள் , பஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள், அலுவலகங்களில் பொதுமக்கள் கழிவுகளை கண்டபடி எறிவதனால் தெருநாய்களின் தொகை அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் தமக்குத் தேவையற்ற நாய்களை பொதுஇடங்களில் கொண்டு வந்து விடுவதாலும் இவற்றை நஞ்சூட்டி அழிக்கவேண்டிய தேவை இருப்பது குறித்தும் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். இவ்விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் செய்ய வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அவர்களிற்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக யாழ் .அரச அதிபர் சகல உள்ளூராட்சி மன்ற தலைவர்களுக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இக்கருத்தரங்குகள் யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு வைத்தியஅதிகாரி டாக்டர் என்.ராஜசேகர் தற்போது வைத்தியசாலையில் வழங்கப்பட்டுவரும் சிகிச்சை தொடர்பாகவும் பொதுமக்களுக்கு அறிவூட்டல் வழங்கியதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் எடுத்துரைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மனித உரிமையை மீறும் படையினருக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் இல்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடமையிலீடுபட்டிருக்கும் படையினர் பொது மக்களிற்கெதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுமிடத்து அவர்களிற்கான சர்வதேச ரீதியிலான உயர் கல்விக்கான புலமைப்பரிசில் விண்ணப்பங்களை நிராகரிக்க அந்தந்த நாடுகளின் தூதுவராலயங்கள் முடிவு செய்துள்ளன. இது தொடர்பில் அவ்வப்பகுதிகளிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்களுடன் குறித்த நாடுகளினது தூதுவராலயங்கள் தொடர்பு கொண்டுள்ளன.

இதனிடையே இந்நடைமுறையினை சில நாடுகள் ஏற்கனவே அமுல்படுத்தி வருவதுடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பகிரங்கமாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதிகாரிகளுக்கான விசா விண்ணப்பங்களை நிராகரித்துள்ளதாக தெரியவருகின்றது. (அ)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இறைவனை நாம் போற்றிப் பாடுவோம். இதயம் நிறைந்த பக்தியுடன் அவருடைய திருநாமத்துடன் ஒன்றியிருப்போம். எப்போதும் ஜபம் செய்தபடியே இருப்போம். பிறகு நமது துயரமனைத்தும் தீரும். முக்தியை நோக்கி மகிழ்ச்சியுடன் நடைபோடுவோம்.

சுவாமி விவேகானந்தர்

# வடக்குக் கிழக்கை நிரந்தரமாக இணைப்பதாயின் முஸ்லிம்களுக்கு தனியான அதிகார அலகு தேவை



## முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்ட ஆவணத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டுமானால் அதில் முஸ்லிம்களுக்குத் தனியான அலகுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையக் கூடிய பிரேரணை ஒன்றை தயாரிக்கும் சர்வகட்சிக் குழுவிற்கு முஸ்லிம்கள் சார்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை ஆவணம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

முஸ்லிம்களின் அபிலாசைகள் மற்றும் கோரிக்கைகள் அடங்கிய 19 அம்சங்களைக் கொண்ட அந்த கொள்கை ஆவணம் குறித்துக் கேட்கப்பட்டதற்கு பதிலளித்த ரவூப் ஹக்கீம் வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் இணைக்கப்பட்டு அவர்களுக்கென நிலத் தொடர்பற்ற வகையில் ஒரு அதிகார அலகு அமைய வேண்டும் என்று தாம்இந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை அமையக் கூடிய அனைத்துப் பிராந்தியங்களிலும் அனைத்து இன மக்களின் சமத்துவத்தைப் பேணக் கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஜனநாயகம் எங்கும் மிளிர வகை செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார். (ந-5)

# ராஜீவ் காந்தியை கொல்லவே துப்பாக்கியால் தாக்கினேன்

## ரோகன விஜயமுனி பகிரங்க வாக்குமூலம்

(கொழும்பு)

19 ஆண்டுகளுக்கு முன்னர் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையின்போது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைக்குத்தான் இலக்கு வைத்துத் தாக்கினேன். அது மரணத்தை ஏற்படுத்தக் கூடியது-அதுவே எனது நோக்கம் என்று தாக்குதலை நடத்திய கடற்படையைச் சேர்ந்த விஜித ரோகன விஜயமுனி பகிரங்க வாக்குமூலம் அளித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

யூலை 30 ஆம் திகதி இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்லவிருந்த ராஜீவ் காந்திக்கு ஜனாதிபதி மாளிகையில் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அந்த அணிவகுப்பின் போது கடற்படையைச் சேர்ந்த விஜித ரோகன விஜயமுனி தான் வைத்திருந்த துப்பாக்கியின் பின் பகுதியால் ராஜீவைக் கொல்லும் நோக்கத்துடன் தாக்க - ராஜீவ் குனிந்து கொள்ள-தோள்ப் பட்டடையில் பலத்த அடி விழுந்தது தெரிந்ததே.

இது குறித்து விஜயமுனி கூறுகையில்;

நான் ராஜீவைக் கடுமையாகத் தாக்கினேன். அது பலமான தாக்குதல். ஆனால் அத் தாக்குதல் விலகிச் சென்று விட்டது. நான் ராஜீவ் காந்தியின் தலைக்குத்தான் இலக்கு வைத்தேன்-அது மரணத்தை ஏற்படுத்தும் தாக்குதல்-அதுதான் என் நோக்கம். ஆனால் அவர் மற்றொரு பக்கம் திரும்பியதால் மயிரிழையில் உயிர் தப்பிவிட்டார்.

ராஜீவ் பாதுகாவலர்கள் என்னை அங்கேயே தாக்கினர். மைதானத்தில் விழுந்து விட்டேன். அதன் பின்னர் கடற்படையால் சோதனையிடப்பட்டு கடற்படைத்தலைமையகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டேன் என்று கூறினார். (ந-5)

## இந்தியாவின் அரியானா மாநிலத்தில்

# 60 அடி ஆழக்குழியில் விழுந்த 6 வயதுச் சிறுவன் உயிருடன் மீட்பு







(டெல்லி)

இந்தியாவின் அரியானா மாநிலத்தில் அறுபது அடி ஆழக் குழியில் விழுந்த சிறுவனை படையினர் நேற்று பத்திரமாக மீட்டெடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த ஆறு வயதுச் சிறுவனான பிரின்ஸ் தவறுதலாக அறுபது அடி ஆழம் கொண்ட குழியில் விழுந்தான்.

இச் செய்தி இந்தியாவின் எல்லை கடந்து உலகம் முழுவதையும் ஈர்த்துக் கொண்டது.

குழியில் விழுந்த சிறுவனை மீட்டெடுக்க மும்பாயில் இருந்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

50 மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர் சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டான். சிறுவனை மீட்டெடுக்கும் பணி நடைபெற்ற இடத்தில் அரியானா முதல்வர் பூவிந்தர் சிங் தங்கியிருந்து பார்வையிட்டார்.

சிறுவனை உயிருடன் மீட்ட செய்தி குறித்து இந்தியத் தலைவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ந-5)

# கீரிமலைக்குச் செல்ல இராணுவம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஆடியமாவாசை நாளான இன்று கீரிமலைக்குச் சென்று பிதிர்க்கடன் செய்வதற்கு இராணுவத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இன்று காலை 7 மணி முதல் சேந்தான்குளம் மற்றும் தெல்லிப்பளை நுழைவாயில்கள் ஊடாக கீரிமலைக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

கீரிமலைக்கு குறை பார வாகனங்களும் துவிச்சக்கர வண்டிகளும் மாத்திரமே அனுமதிக்கப்படும் எனவும் குழுக்களாக வருபவர்கள் பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ள வழமைபோல் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று இடம் பெற்றதோடு தீர்த்தோற்சவம் இன்று இடம் பெறும். (ந-5)

# வவுனியாவில் 4 பேர் கைது

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரால் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா சுதந்திர்புரம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையின் போது வேலாயுதன் சைவரூபன் (வயது-27), மயில்வாகனம் கேதீஸ்வரன்(வயது-23), செல்லையா கோவிந்தராஜ் (வயது-55), தாவலன் (வயது-25)ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் படையினர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அனைவரும் இன்று திங்கட் கிழமை வவுனியா நீதிபதியிடம் முன்னிலைப் படுத்தக் கூடும் என்று கூறப்படுகிறது. (ந-5)

## இலங்கை நிலைமை...

அமைதிப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட வேண்டும்.எதிர்க் கட்சித் தலைவராக இருப்பதால் இதற்கு மேல் இது குறித்து பேச இயலாது என்றும் அவர் கூறினார். முன்னதாக டில்லியில் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரை அவர் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்து பேசினார்.

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டுமென்பதே இந்தியத் தலைவர்களின் எண்ணம் என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க இலங்கை அமைதிப் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் நிலைப்பாட்டை வரவேற்பதாகவும் கூறினார். (ந-5)

## கைக்குண்டுத்...

கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலைத்தொடர்ந்து கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு பொது மக்கள்படு காயமடைந்துள்ளனர். (ந-5)

## பயங்கர...

கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் இவர்கள் விடயத்தில் மன்னிப்பு என்ற பேச் சுக்கு இடமிருக்க மாட்டாது என்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்கள் மீதுகடும் கண்கார்ணிப்பு ஏற்படும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

## இலங்கைப் பிரச்சினையில்...

தில் தலையிட இந்தியா விரும்புவதாக வும் அதேநேரம் நோர்வேயின் சமாதான அனுசரணைப்பணியை நிறுத்திதான் தலையிடுவதே இந்தியாவின் நிலைப்பாடு எனவும் அந் நாட்டு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை வரவேற்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிற்கு செவ் வியளித்த அவர், இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் இலங்கைக்கு வந்து பேச்சு நடத்தியமை அந்த நாட்டின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுவதாகவும் குறிப்பட்டார். (ந)

## சாவிலும்...

முகமாக தெருக்கூத்து சிட்னி கலைபண்பாட்டுக் கலைஞர்களால் தயாரித்து வழங்கப்பட்டது. (ந-5)

## லெபனானில்...

கொண்டு இலங்கைக்கு மீண்டும் தகவல் தர இயலும் என லெபனானுக்கான இலங்கைத் தூதர் ஏ.பாரூக் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக லெபனானில் உள்ளவர்களின் கைத் தொலைபேசி இலக்கங்கள் தொடர்புக்கு மிகவும் உதவியாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். (ந-5)

கரன் சதனா நடித்த

சங்கானை கா.நே. 10.30, 2.15, 5.00

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.